1071

. M. 10

AUTHOR & PROPRIETOR

வருஷ சந்தா ரூ. 1-8-0

வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

2

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 SEPTEMBER 1931 இதழ் 10

17 AUG 1932

தனிப் பிரதி அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்.
26, தேரடித் தெரு.
திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஜகன்மோகினி — ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

ரிஜிஸ்டர்டு

S.V. CHARI & SONS
TRIPLICANE MADRAS

டிரேட் மார்க்.

குணத்திற்சிறந்த, பரி[மள]மிகுந்த,

சந்தனாதி தைலம்.

தேக குளிர்ச்சியும், இன்பமான வாஸனையும் தரும், கூந்தலை வளரச்செய்யும்.

18 பலம் டின் விலை ரூ. 2-0-0 8 பலம் டின் ரூ. 1-0-0

4 பலம் டின் விலை 0-9-0.

கூந்தல் வளரச்செய்யும். கபால உஷ்ணம் தணியும்.

அற்புத அரைக்கீரைவிதை தைலம்.

கண் ஸம்மந்தமான ஸகல ரோகங்களை நிவர்த்தித்து தேக குளிர்ச்சியை அபரிதமாய்கொடுத்து கூந்தலையும் செழிப்பாய் வளரச்செய்யும். சொரி, தேமல், படை முதலியவைகளும் இத்தைலத்தை தடவினவுடன் மறைந்து விடும். மனோஹ்லாசமான மணம் கொடுக்கும்.

10 பலம் டின் விலை ரூ. 1-8-0. 6½ பலம் டின் விலை ரூ. 1-0-0.

3¼ பலம் டின் விலை ரூ. 0-9-0.

இவையன்றி எங்களிடம் அசல் புனுகு, ஜவ்வாது, அரகஜா, உயர்ந்த பன்னீர், பரிமள கலவைச்சந்தனம், வாசனையுகந்த சுகந்த சுண்ணாம்பு, சந்தனப்பவுடர், தசாங்கம், சிக்னப்பொடி, குல்குந்து, அத்தர் பில்லைகள் உயர்ந்தவத்தி தினுசுகளும் கிடைக்கும்.

நமது கிரய ஜாப்தா இனாம்.

ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் உண்டு.

எஸ். வி. சாரி அண்டு ஸன்ஸ்,

71, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

ஜோதிஷம்.

ஜாதக நகலாவது, லெட்டர் எழுதும் நேரமாவது எழுதியனுப்பினால் உங்கள் எதிர் காலபலன்களை உள்ளபடி எழுதியனுப்பப்படும். 1 முதல் 4 கேள்விகள் ரூபா 1, ஒரு வருஷப்பலன் (மாதவாரியாய்) எழுத ரூபா 2, நினைத்த காரியம் சித்தியாக நவகிரக கவசம் ரூபா 3, பிசகான ஜாதகங்களுக்கு இலவசமாய் கிரஹஸ் புடம், லக்னஸ் புடம், செய்து பலன்களை எழுதப்படும். ஆயுஸ் வரையில் பலன்களுக்கும் இதர விஷயங்களுக்கும் சார்ஜுகளுக்கு எழுதி தெரிவித்துக்கொள்ளவும்

S. வெங்கடேச சாஸ்திரிகள்.

Sarada Astrological Bureau,

மஞ்சப்புத்தூர் விரியூர் *P. O.*

Via Tirukoilur. S. I. R.

முக்கிய அறிவிப்பு.

(1) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(2) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

14—வது அதிகாரம்

பத்தினியின் வெற்றி – தத்தளித்த [illegible]

1932

கள்ளுக்கடைக்காரனின் வெறி பிடித்து மூடத்தனத்தினால் சற்றும் யோசியாமல் துப்பாக்கியைக் கொண்டு யாரும் எதிர்பாராவிதமாகப் பட்டார் என்று சுட்டு விட்ட செய்கையானது பஞ்சுப் பொதியில் நெருப்பை வைத்தது போலக் குபீரென்று அங்குள்ள சகலமான ஜனங்களின் இதயத்திலும் ஓர் வித உணர்ச்சியும், பரபரப்பும் உண்டாக்கி விட்டது. நாகஸாமி கையில் வைத்திருந்த மொந்தைக் கள்ளை மெல்லக் குடிக்கத் துவக்கினான். அதில் இரண்டு வாயைக் குடித்ததும் வாயில் ஏதோ தட்டியது. அதை உடனே துப்பிப் பார்க்கையில் ஓர் தேள் செத்துக் கிடக்கக் கண்டதும் அவனுக்கே அந்த அருவருப்புத் தாங்காது வந்துவிட்டது ஆத்திரம். அதே சமயத்தில் கள்ளுக் கடைக்காரன் சுட்ட வெடிச் சத்தம் கேட்டு எல்லோரும் அலறினார்கள். அப்போது நாகஸாமியும் திடுக்கிட்டுக் கையிலிருந்த கள்ளு மொந்தையைக் கீழே தபீரென்று போட்டான். அது உடைபட்டு உள்ளிருந்த கள்ளு வெளிப் பட்டபோது அதில் சிறிய சுண்டெலி செத்து அழுகிக் கிடக்கக் கண்டான். ஆகா! அவனுடைய ஆத்திரம் பொங்கிவிட்டது. இந்த தேளையும் சுண்டெலியையும் அங்குள்ளவர்களுக்கு ஆத்திரத்தோடாத்திரமாகக் காட்டியபடி ஒரே ஓட்டமாகக் கள்ளுக் கடைக்காரன் நின்ற இடத்திற்கு ஓடினான். அதற்குள்ளாகவே அங்கு நின்றிருந்தவர்கள் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

சிலருக்குப் பொய்யுரைப்பதிலேயே நாட்டம். அந்தப் பொய்யின் மூலமாகவே அவர்கள் அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றார்கள். நிஜத்தை ஏன் மறைக்கவேண்டும். உண்மையை ஒளிக்கும் எந்தக் காரியத்திலும் அகப்பட வேண்டியதுதான்.

நாகஸாமி இங்கு வந்தவுடன் கீழே விழுந்து கிடக்கும் ஸாவித்திரியை—அவள் மீதிருந்து ஓடும் இரத்த ஓட்டத்தைக்—கண்டு பிரமித்துப் போய் ஒன்றுமே தோன்றாது இமைப்பொழுது ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அங்கு தொடர்ச்சியாக நடந்த விஷயங்களால் அவன் மனத்தில் பெரும் பீதியும் தாங்கவியலாத ப்ரமிப்பும் ஆத்திரமும் உண்டாகி விட்டதால் அவன் அப்படியே அசைவற்று விட்டான். அடுத்த க்ஷணத்தில் அவனுக்கு எங்குமில்லாத வீரமும் புத்துயிரும் உண்டாகிவிட்டது. அதே நிமிடத்தில் ஸாவித்திரி சகிக்கக் கூடாத இம்சையோடும், தாங்கொணாத அபார சந்தோஷத்தோடும் பேசத் தொடங்கி "ஹா! என் பிராணநாதா! என்னுயிர்த் தலைவா! என்னரிய சகோதரர்களே! இந்த சம்பவத்தின் நிகழ்ச்சியினால் என்னுயிர் நீங்கினும் நீங்கலாம். நான் இறக்கப் போவதைப் பற்றிச் சிறிதும் வருந்தவில்லை. சந்தோஷமே அடைகின்றேன். கள்ளுக்கடைக்காரரின் செய்கையையும் அவருடைய மனப் போக்கையும் நீங்கள் நேரில் தெரிந்து கொண்டமையினால் கள்ளை விற்கக் கூடியவனின் புத்தியே இத்தகைய சண்டாளத்தனமாக இருக்கையில் அக்கள்ளை வாங்கிக் குடிப்பவர்களின் கதி எவ்விதம் முடியும் என்பதை நீங்கள் நேரில் அறிந்து கொண்டு விட்டீர்கள். இந்த அரிய சம்பவத்தை அளித்த பரந்தாமனை என்னுடைய மனமார வணங்குகின்றேன். குடியைக் கெடுப்பதற்கே குடியை விற்கும் அற்பப் பதரின் ஆத்திரத்தைப் பாருங்கள். என்னுயிர் நீங்குவதன் மூலமாகவாயினும் இனி இச் சண்டாளக் குடியை விட்டுவிடுவீர்களென்று நம்புகின்றேன். இக்குடியை ஒழிப்பதற்கே உலகத்திற்கெல்லாம் குரு போன்ற காந்தியடிகள் பாடு படுகின்றார். அதைக் கேளாது எத்தனை குடும்பங்கள் கெட்டு பாழ்பட்டுவிட்டன. என் குடியும் நானும் அக் குடி என்ற விஷத்தினாலேயே அழிந்துபோகும் படியான நிலைமைக்கு என் பர்த்தா வந்து விட்டார். இனியுள்ள

தேவதாசிகளிலேயே அடக்கமாகவிருப்பவர்கள் எத்தனையோ பேர்களுண்டு. அவர்களிலேயே சிலர் தம்மைவிட மேலான ஜாதியினரை தூஷித்துத் தம்மை உயர்த்திக்கொள்வதிலேயே பாடுபடுகின்றார்கள். அவர்களின் ஊழல் மறைந்தாலன்றோ உயர்வு கிடைக்கும்.

மக்களேனும் குடிக்காமல் இருக்கும்படியாகத் தடுத்து ஆதரிப்பீர்
களா! உலகத்திலுள்ள கள்ளுக் கடைகளை எல்லாம் ஒழிப்பீர்களா!
மறியல் செய்வீர்களா! குடியின் கேட்டை அறிவீர்களா? ஹா! என்
நினைவு மயங்குகின்றது. என்னை ஏதோ சித்திரவதை செய்கிறது.
என் பிராணநாதா! என் பிராணநாதா! தாங்கள் இதுகாறும் குடித்த
கள்ளுதான் என் மீதிருந்து இரத்த மூலமாக வெளி வருகிறது
என்பதை நன்கறியுங்கள். நான் இம் மண்ணைவிட்டு மறைந்த பிற
காவது நீங்கள் சுகப்பட்டுக் குடியை விட்டு வாழ்வதோடு உலக மக்
களையும் குடிக்காமல் தடுக்கக் கங்கணங் கட்டிக் கொண்டால்
போதும். நான் மேலுலகத்திலிருந்து உம்மைக் கண்டு ஆநந்திப்
பேன். கள்ளுக் கடைக்காரப் புண்ணிய மூர்த்தியே! உமது பணப்
பேராசையினால் எத்தனை குடும்பங்களைச் சின்னாபின்னமுறச் செய்
திருப்பீர். எத்தனை ஏழைகளின் வயிற்றில் தீயை மூட்டி இருப்பீர்.
எத்தனை ஏழைகளின் குடியைக் கெடுத்திருப்பீர். எத்தனை உயிர்
களைக் கொலை செய்திருப்பீர். எத்தனை கொடுஞ்செயல்களைப் புரிந்
திருப்பீர். ஹா! அத்தனை பாபக் குவியலும் உம்மைவிட்டு நீங்க
வில்லை என்பதை மறக்காதேயும். அத்தனையும் உமது கள்ளு
மொடாவிலும் மொந்தையிலும் அளந்தே கடவுள் வைத்திருக்கிறார்.
உமது படாடோபமான வாழ்வுதான் சதமென்று எண்ணாதேயும்.
அத்தனையும் பிறகு சித்திரவதையாய், நரகக் குழியாய், உம்மைத்
தொடரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. உம்முடைய செய்கை
யால் இங்குள்ள மக்களுக்கு நல்ல புத்தி பிறந்தது. அவர்கள் இனி
நித்திரை செய்யமாட்டார்கள்; விழித்துக் கொண்டார்கள், அவர்கள்
இனியுள்ள மக்களையும் தட்டி எழுப்புவார்கள் என்பதில் எனக்கு
நம்பிக்கை பிறந்துவிட்டது. ஹா! ஐயோ! வலி தாங்க முடியவில்
லையே! தலை சுற்றுகின்றதே! நாதா!...நாதா!...என்னினைவு மாறு
கின்றது. ஹா....ஏதோ....செய்....கி....ன்..ற..து..என்....னால்..பேச
க்கூ....ட வி...ல்...லை...ஒரு....கா....ல்....என்னுயி....ர் நீ....ங்....கு....வ
த....ற்....குள்....என....க்கு....நி....னை....வு....உண்டா.....கு.....மோ.....

வாயாடி வம்பர்களின் கோஷ்டியில் சேருவதே பிசகு. தப்பித்தவறி அகப்பட்டுக்கொண்டாலோ அவர்களுக்குப் பதிலே பேசாது மவுனமாக அங்கு கிடைக்கும் விஷயத்தைக் கேட்டுக்கொண்டு வந்துவிடுவதுதான் உசிதம்.

உண்டா....காதோ....தெரி....யாது....ஆகை....யி....னால்...எனக்....கு.. ஒரு....வா....க்கு....று..தி...செய்....துத்...தரவே....ண்டும்....எனது.. கடை...சிகா....லத்தி....ல்....நான்....வேண்டு....வது...ஒன்று....ளது. அதாவ....து...நான் மறை....ந்த பி....ற...கேனும்....நீங்கள்...இ....ந்த....ச் சண்....டாள....பாதக....மதுவை....விட்டு....ஒழி....த்து.... மது வி....லக்கு...ப் பிரசா....ரத்தி லீடு....பட்டுக்....குடி....யை.... ஒழி....க்க....வழி....செய்....வீர்....களா? எனக்....கந்த....உறுதி....யை சத்....தியம்....செய்து....த் தர...வே....ண்டும் இதை....த்தான் நான்....எதிர்....பார்க்....கின்றேன். நாதா!....தாங்கள்....எங்கே.... இரு....க்கிறீர்....கள்....ஹா....அருகில்...வா....ரு....ங்கள்....என்...பி..றவி...யில்....நான்....தங்கள் கர...த்தை...ஆனந்....தத்தோ...டு..ஒரு ..தினமேனும்...ஸ்பரி....சித்....த....றியேன். என்.... கடைசி....கால..த்தி....லா....வது....தங்க....ள் கர....த்தை....இன்ப....முடன்....ஸ்....பரிசித்....து என்...னுயி....ரை வி....டுகிறே....ன். எங்கே....கரம்.... எங்கே....கரம்!”....என்று கூறிக் கொண்டே தன்னிரு கரத்தையும் உயரத் தூக்கினாள்.

ஹா! அந்தோ! இந்த பரிதாபமான கோர சம்பவத்தினால் எல்லோருடைய மனமும் உருகிற்று. இவ் வார்த்தைகளைக் கேட்ட எல்லோருடைய இருதயமும் அடித்துக் கண்ணீர் வழிகின்றது. நாகஸாமியின் நிலைமையை வரையத் திறமன்று. கள்ளுமொந்தை உடைந்ததோடு பழய நாகஸாமியும் உடைந்து போய் புதியவனாகி விட்டான். ஸாவித்திரியின் ஒவ்வொரு வார்த்தையும் அவன் செவியில் பட்டு மனம் கரைந்து பாகாயுருகி யோடுகின்றது. தன் மனைவி என்கிற ஓர் புத்துணர்ச்சி அவன் மனத்தில் கிளைத் தெழத் தொடங்கியது. கள்ளுக் கடைக்காரனைக் கொன்று விடவும் மனத்தில் உறுதி

பாட்டுப்போட்டியில் சென்று பார்த்தால் அது ஒரு பெரிய தமாஷ். பாடுவதற்கு முன்பு பாட வந்திருக்கும் குழந்தைகளின் முகம் கிலியும், பயமும் கூடி களையற்று விளங்குகின்றது. பாடிய பிறகோ யாருக்குப் பரிசு வருமோ என்கிற ஒரு பெரிய யோசனையும் சந்தோஷமும் உண்டாகிறது. பரிசு விவரம் தெரிந்தபிறகோ பரிசுபெற்றவர்கள் முகம் சந்தோஷ ஜொலிப்பில் பூரிக்க, மற்ற முகங்கள் பூமிதேவியை நோக்குகின்றன.

யுண்டாகி விட்டது. அவன் ஸாவித்திரியின் அருகில் வந்தான். அவ்வுத்தமியைத் தான் இது பரியந்தம் நடத்திய சிறுமைகளை எல்லாம் எண்ணி மனம் நொந்து அவள் முகத்தில் எவ்விதம் விழித்துப் பேசுவது என்ற பெரும் அச்சமும் நாணமும் உண்டாகிவிட்டது. எனினும் அவன் அப்போதைய மாறுதலில் பேசாதிருக்க மனம் இடங்கொடுக்கவில்லை; இந்த மனோ விகாரத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கையில் ஸாவித்திரியின் கடைசி வார்த்தை செவியில்பட்டது தான் தாமதம். நெருப்பின்மீது விழுந்த புழு வெனத் துடித்தவாறு "ஹா! என் கண்ணே ஸாவித்திரி....ஸாவித்திரீ! தாழி உடைந்தபிறகு வெண்ணெய் திரட்ட வந்தேனே! என் மடமையை அகற்றிய மானவதீ! என் நிலைமையை மாற்றிய நீதி யுருவே! சண்டாளன் நான் உன்னை மணந்த நாள் முதலாக உன்னைக் கண்ணெடுத்தும் பாராது பற்பல இன்னல்களுக்கு இலக்காக்கி விட்டேனே! என்னையும் இம் மண்ணையும் விட்டு நீ போகும் தருணத்தில் நான் இனி வருந்திப் பயன் யாது? கதறினால் கதி ஏது? துடித்துத் துறை உண்டோ! ஹா! என் கண்ணே! அறிந்தேன் என் மடமைத்தனத்தை. என் வாழ்நாள் முற்றும் பாழ் நாளாகக் கழித்தேன். அக்கினி சாக்ஷியாக மணந்த உன்னை அனலில் பொசுக்குவது போலப் பொசுக்கினேன். மனைவி என்கிற மகிமை யறியாது மனந் தவிக்கச் செய்தேன். காதலின் கண்ணிய மறியாது கண்ணீர் விடச் செய்தேன். என் இன்ப வடிவே! உன் மொழி பொன் மொழி என்பதை மறந்து என் பொருளெல்லாம் பறி கொடுத்தேன். என் கண்ணிய மெல்லாம்—குலத்தின் கீர்த்தியை எல்லாம்—போக்கிக் கொண்டேன். சண்டாளன், குடிகாரன், மனைவியை மதியா மடையன், மிருகத் தன்மை வாய்ந்த மவுட்டீகன் என்ற வசைப் பெயர்களைத் தாங்கினேன். துஷ்ட சகவாசம் செய்து பலவிதத்திலும் தூர்த்தனானேன். பாழுங் குதிரைப் பந்தயத்தினால் எனக்குற்ற கேடுகள் ஒன்றிரண்டல்ல. ஐயோ!

ஆதியில் பிடிவாதமாகத் தன் குழந்தையை கிணற்றில் தள்ளுவதற் கொப்பாக இஷ்டமில்லாத மூடத்தினிடத்தில் தள்ளிவிட்டுப் பிறகு பெண் கண் கலங்கும்போது "இத்தனை தூரம் வந்துவிடும் என்று நான் நினைக்கவில்லையே" என்று பெற்றோர் பல்லவி பாடினால் குழந்தையின் துயரம் தீருமா, ஆறுமா, இன்பம் பிறக்குமா!

நினைத்தாலும் பகீரென்கிறதே! ஏ தோழர்களே! அன்பர்களே! என் கதியைக் கண்டீர்களா! குதிரைப் பந்தயமும், பாழுங் குடியும், உலகைக் கெடுக்கும் வேசி யுறவும் என்னை இக் கதிக்குக் கொண்டு வந்தன. என்னைக் கேவலம் சண்டாளனிலும் சண்டாளனாக்கி விட்டன. என்னுயிரிருந்தும் நான் பிணமானேன். என் செல்வ மிழந்தேன்; சீர் இழந்தேன்; கௌரவ மிழந்தேன்; கண்ணிய மிழந்தேன் பந்து மித்ரரால் விலக்கப் பட்டேன். தூர்த்தன் என்ற பெயர் தாங்கினேன். என் மனைவியையும் இழந்தேன். என்னைத் தவிர சகலத்தையும் இழந்த வெறுங் கட்டை யானேன். ஹா! ஐயோ! ஏ குதிரைப் பந்தயமே! ஏ குடியே! ஏ வேசி முண்டையே! ஏ துஷ்ட நேசர்களே! போதும்! போதும்! உங்களால் நான் அறிந்த பாடம் போதும். பட்ட துன்பம் போதும். அடைந்த பலன் போதும். கடவுளே! ஹா! சண்டாளன் என்னை நீ மன்னிக்க மாட்டாய். நான் பெருங் கொலைப் பாதகன். என் மனைவியின் மரணத்திற்குக் காரணகர்த்தன் நான் என்பதை உன்னிடம் ஒளிக்க முடியாது. என்னை இனி உலகம் தன்னகத்தே சேர்த்துக் கொள்ளாது. நான் பஞ்சமா பாதகன். என் கண்மணீ! சாவித்ரீ! சாவித்திரீ! உன்னை நான் ஒரு தினமேனும் இன்பமுடன் நோக்கி யறியமாட்டேனே! பாவி என் கரத்தையா.......சண்டாள கரத்தையா.......மொந்தை மொந்தையாயும் புட்டி புட்டியாயும் குடியைத் தாங்கிக் குடித்தக் கரத்தையா..........வேசியை அணைத்த கரத்தையா!.......கூசாது பணத்தை வேசிக்கும் குதிரைப் பந்தயத்திற்கும், துஷ்ட நேசருக்கும் வாரி இறைத்த கரத்தையா.......மகா உத்தமியாகிய உன் பொருளைக் களவாடிய கரத்தையா.......உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகானின் அடி போற்றும் கற்பரசியாகிய உன்னை அடித்த கரத்தையா.......ஐயோ! தர்மமே அறியாது

கதரின் மகிமை நிறைந்துள்ள இக்காலத்தில் எப்படியாயினும் விலையாகி விட்டால் போதும் என்று எண்ணி அன்னிய நாட்டுத்துணிகளை ஜனம் காலணாவிற்கும் கொடுக்கத் தயாராகிவிட்டார்கள். அதை வாங்குவதற்கோ தேச பக்தியற்ற புண்ணிய மூர்த்திகள் "நான் முந்தி; நீ முந்தி." என்று போட்டியும் போடுகிறார்கள். ஐயோ! நம் தேச நிலைமை இவ்விதம் தெரியாமல்போன தேனோ!

அதர்மத்திற்கே ஆதாரமாக விருந்த இக்கிராதகக் கரத்தையா, கொடிய கரத்தையா நீ கேட்கிறாய்? ஐயோ! இக் கரத்தை வெட்டி வேக வைப்பினும் செய்துள்ள பாபம் தீராதே (தன் கரத்தைப் பிசைந்துகொண்டு பூமியில் அறைந்துகொள்கிறான்) என் அன்பே உன்னைத் தீண்டுவதற்கும் இக்கரத்திற்கு அருகதை இல்லையே! என்ன செய்வேன்? சாவித்திரி! நீ சொல்லியது போல என் குடி முற்றுமே உன் உதிரமாக மாறி வெளிப்படுகின்றது....ஐயோ.... ... எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே!....இன்ப வடிவே! இதோ கரம் இதோ கரம்; என் கண்ணே! நான் இனி என் வாணாளை வீணாளாகக் கழியேன்; மது விலக்குப் பிரசாரத்தில் இன்றே சேருகிறேன். இனி மதுக் கடையை ஹதா ஹதம் செய்துவிடுகிறேன். குடிக்கும் சகோதரர்களின் காலில் விழுந்து நான் கெஞ்சிக் கூறி அவர்கள் குடிப்பதைத் தடுக்கிறேன். இனி என் சத்ருக்களுக்கும் குடிப் பழக்கம் வேண்டாம். என்னுடன் குடி மறையட்டும். என் கண் மணி! சத்தியமாக நான் இன்று முதல் மகாத்மா காந்தி யடிகளின் ஆணைக் குட்பட்ட தொண்டனானேன். மது விலக்குப் பிரசாரத்தில் என் அனுபவத்தையே நான் காட்டிக் கூறுகிறேன். என் காலத்தை நான் மறியல் செய்யவும், பிரசாரம் செய்யவும் கழிக்கின்றேன். கண்ணே! இனி நான் என்ன செய்தும் பயன் உண்டா! இல்லை இல்லை. என்னுடைய செய்கையைக் கண்டு சந்தோஷிக்கும் தேவதை நீ மறையப் போகிறாயே! ஐயோ! உன்னருமை உன்னுயிர் நீங்கும் காலத்திலல்லவா தெரிந்தது" என்று இவன் புலம்பிக் கொண்டே இருக்கையில் ஸாவித்திரி தன் கணவனின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு அவற்றிற்கு அன்பான முத்தமிட்டுப் பின் பேசத் தொடங்கி, "என் பிரா....ண....நா தா!....இக்....கர த்....தைப் பிடித்து....நான் வேண்டியது கொஞ்....சமன்றோ!...என் வா....ர்த்தை அப்....போது....தெரியா விடினும்....இப்....போது...தெரி....ந்த....து அ....ல்லவா....உங்....ளை

சுதேச அபிமான முள்ளவர்கள் தம் நாட்டின் பண்டத்தை விட்டு வெளி நாட்டிற்குச் செல்வார்களா! கழுதை..................கை நிரம்ப வருகிறதென்று வாங்க மனம் துணியுமா! அவ்வாறு வாங்குகிறவர்களை தேச விரோதி என்பதா ஆசைப் பிசாசு என்பதா!

இக்....கதி...க்கு...க் கொண்...டு வ....ந்த....நேசர்....கள்....இப்போது....எங்கே....சென்று....ர்க....ள்....பா...., தகர்... கள்....நேசம்....நிலைக்...குமா....நாதா!.....நா.....தா....ப்ரா.... ண....நா....தா.....இச்சத்திய....த்தை....மற....க்....காதீர்...ஹா!....மய...க்க....ம்.மேலி....டு....கிற....தே....தேச....பக்தி...யை...மறக்க....வேண்டாம்,....கா....ங்....கி....யடி....களை மற....க்....க வேண்டாம்.....எ....ன்....னை...ம....ற....க்....காதீ....ர்....க.... ள்....நாதா.....என்று பேசுகையில் மயக்கம் அதிகரித்ததால் வாய் குழ குழத்து விட்டது. அடுத்த க்ஷணம் கண்ணை மூடிவிட்டாள், நினைவு அழிந்தது. சவம் போலானாள்.

இந்த கோரத்தைக் கண்டு சகியாத ஜனங்களில் சிலர் ஸாவித்திரியின் காயத்திற்குத் துணியைப் போட்டு கட்டுகிறார்கள். சிலர் ஓடிச் சென்று போலீஸாரை அழைத்து வந்தார்கள், மற்றும் சிலர் கள்ளுக் கடைக்காரனை வாயில் வந்தவாறு திட்டுகின்றார்கள். நாகஸாமிக்கு ஆத்திரம் தலை மிஞ்சி விட்டது. கண்கள் சிவக்க, அங்கம் துடிக்க வீரா வேசத்துடன் எழுந்தான். கள்ளுக் கடைக் காரனை நோக்கி "அடே கொலைபாதகா! சண்டாளத் துரோகி! என்னுடைய குடியைக் கெடுத்த கோடரிக் காம்பே! என்னை ஆதிமுதல் அழித்ததெல்லாம் போதாதென்று என் மனைவியையும் கொலை செய்துவிட்டாயே காதகா! துஷ்டரது நட்பின் முடிவு இதுதான் என்பதை எடுத்துக் காட்டி விட்டாயே நாசகாலா! உன் குடும்பம் சீர்பட்டு விளங்குமா? ஹா! அதோ கதியாக வன்றோ அழியப் போகின்றது அடேய் அதமா! அல்ப நாயே! நீ செய்துள்ள கொடுமை உன்னை விடாது; விடாது. தாக்கி வருத்தி சித்திரவதை செய்யும் என்பதில் ஐயமே இல்லை. உன்னுடைய செய்கையை எங்கும் வியாபியாயுள்ள பரம்பொருள் அறியவில்லை என்று நினைத்து இறுமாப்புக்கொள்ளாதே. என் கண்மணியினால் அன்றோ எங்கள் மதி திருந்தியதோடு உன்னுடைய சூழலும் மோசமும் வெளிப்பட்டது. அவளைக் கொலை செய்த கிராதகப்பதரே! இதோ

சில மனிதரைப் பார்க்கும் நேரம் மனம் பிடித்துவிடுகிறது. அவர்களை விட்டுப் பிரியும் காலையில் கண்ணீர் எங்கிருந்தோ உண்டாகிவிடுகிறது. அந்தக் காட்சி எனையும மறத்தற்கரிதான காட்சியாகிவிடுகிறது. அன்புதான் காரணம்.

இத்துப்பாக்கியினால் உனக்கு என்றும் ஞாபகம் இருக்கும் பொருட்டு உன்னைச் சுடுகின்றேன். உயிர் நீங்காவண்ணம் வதை செய்து பார்க்கவே என் மனம் தாவுகின்றது” என்று ஆத்திரத்தோடு கூறித் துப்பாக்கியை எடுத்தான்.

நமது மதனகோபாலன் ஸாவித்ரியை அங்கு அழைத்து வந்துவிட்டுப் பின் வீதியிலேயே நின்றிருந்தான். அவனுக்கு தேக பாதை நிவர்த்தி செய்யும் அவசியம் ஏற்பட்டதால் வீதியிலுள்ள முனிசிபாலிடி......இடத்திற்குச் சென்று கால் சுத்தி செய்துகொண்டு திரும்பும்போது இங்கு பெருங் கூட்டமும் குழப்பமும் இருக்கக் கண்டு வேகமாக உள்ளே பிரவேசித்து விசாரித் தறிந்துகொண்டு “ஹா ஸாவித்திரீ! என்னருமை ஸாவித்திரீ! உன் வாழ்நாள் முற்றும் துன்பப் பட்டாய்; கடைசியில் ஒரு கள்ளுக் கடைக்காரன் கையினாலா இறக்க நேர்ந்தது! ஐயோ! என்ன செய்வேன்?” என்று கதறியவாறு சாவித்திரியினருகில் அமர்ந் தான். அதே தருணந்தான் நாகசாமி துப்பாக்கியை எடுத்ததை அறிந்த மதன கோபாலன் சடக்கென்று அதைப் பிடுங்கிக்கொண்டு ஹா! நாகஸாமீ! என் தங்கை மடியப் போகிறாள் என்கிற விசனத்தை விட எனக்குப் பதின் மடங்கு அதிகரித்த சந்தோஷம் உன் மதி திருந்தியதால் உண்டாகிறது. அவன் தான் அக்ரமம் செய்தான் என்றால் அவனுக்கு நாம் நல்ல மதி புகட்டி அவன் செய்த குற்றத்தை உணர்ந்து வருந்தும்படியான மார்க்கத்தைச் செய்வதை விட்டு அவனுக்குச் சரியாக நீயும் துப்பாக்கியை எடுத்தால் அதில் என்ன உபயோகம்? நமது காந்தியடிகள் என்ன சொல்கிறார். அஹிம்சையைக் கடைப் பிடிக்க போதிக்கின்றார். அவ் வழியை நாம் பின்பற்றினால் கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவோமல்லவா! ஆத்திரப்படாதே! அவன் செய்த குற்றத்திற்குத் தக்க

“ஏ மனமே! தேச பக்தியில் ஈடுபட்டுள்ள நீ மற்ற அனாவசியமான விஷயத்தில் ஏன் செல்லவேண்டும்? நன்றிகெட்ட நேசரை நினைக்காதே. மறந்து விட்ட—வேண்டுமென்றே விலகிவிட்ட—சிநேகிதரை எண்ணாதே! பழங் காலக் கதைகளை யோசிக்காதே. அவை எல்லாம் கனவு. உனக்குள்ள வேலையை நீ கவனி.” என்கிறார் தன் மனத்தை நோக்கி ஒருவர்.

தண்டனையை விதிக்கக் கடவுள் காத்திருக்கிறார். அவர் தூங்கு மூஞ்சியல்ல. அதோ போலீஸார் வந்து விட்டார்கள். நாம் வீணாக நேரத்தைக் கடத்திக்கொண்டு செல்வதில் பயனில்லை. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு நம்மாலான சிகிச்சையைச் செய்து பார்த்து விடுவோம். கடவுள் விட்ட வழியாகிறது." என்று இன்னும் ஹிதமாக உபதேசித்து அவளைச் சாந்தமுறச் செய்தான்.

போலீஸார் வந்தவுடனே அவர்கள் சட்டப்படிக்கு விசாரணைகளை நடத்திப் பின் கள்ளுக் கடைக்காரனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். மதனகோபாலனும் நாகஸாமியும் ஓர் மோட்டார் கொண்டுவந்து ஸாவித்திரியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். டாக்டர்கள் இந்த விவரத்தை அறிந்து கள்ளுக் கடைக்காரன்மீது வெறுப்புற்று இந்தம்மாள் மீதில் இரக்கம் கொண்டு வெகு கனிகாரத்துடன் சிகிச்சை செய்து கட்டு கட்டினார்கள். ஊசி குத்தினார்கள். உடம்பிலிருந்து அதிகமான இரத்தம் போய்விட்டபடியினால் பலஹீனம் அதிகரித்து மூர்ச்சையாகி விட்டது என்று கூறி அதற்கான மருந்துகளை உட்செலுத்தினார்கள். இந்தம்மாளுக்கு வந்துள்ளது மிகவும் ஆபத்தான நிலைமைதான். இதற்கு நாங்கள் உத்திரவாதமாகப் பதில் பேச முடியாது. ஜுரம் வராமலிருக்குமாயின் சற்று பார்க்கலாம். அது கண்டு விட்டால் கை விட்ட பொருள்தான்" என்று வைத்தியர்கள் கூறி விட்டார்கள்.

இதைக் கேட்ட இருவரின் இதயமும் துடித்தது. மனம் பதறியது. அவர்கள் இன்னது செய்வது என்று அறியாது சற்று நேரம் தவித்தவாறு அவ்விடத்திலேயே நின்று விட்டார்கள். அன்று பூராவும் ஆஸ்பத்திரியிலேயே தங்கி வெகு கவலையோடு ஸாவித்திரிக்கு எப்போது தெளிவு உண்டாகும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸாவித்திரி தன் அண்ணனுடன் பிரசாரம் செய்யும்பொருட்டாக வெளியூருக்குச் சென்றிருந்த சமயம் நாம்

வினா—எந்த விஷயத்தில் அதிகமான கோபம் வருமையா!

விடை—குறித்த காலத்தில் பத்திரிகை யனுப்பாத பத்திராதிபர் மீதுதான் கோபம் அதிகம் வரும்.

முன்னர் தெரிவித்தபடி திலோத்தமாவும், ஜெபலக்ஷ்மியும் கைதியானார்கள். ஸாவித்திரி ஊரிலிருந்து வந்த அன்றே பேரிடிபோன்று விடு விற்ற செய்தியை அறிந்து வருந்தித் தன் பர்த்தாவைத் தேடிக் கொண்டு சென்று விட்டதால் அவர்களைப் பார்க்கவும் கூடாது போய் விட்டது. உடனே அவளுக்கே பேராபத்து வந்து மூண்டு ஸ்மரணைபற்று விட்டாள். “அவர்களுக்கு மட்டும் சிறைவாசம் கிடைத்து விட்டதே; நமக்குக் கிடைக்கும் ப்ராப்தம் எப்போதோ?” என்று எண்ணினள். அதற்குள்ளாக இத்தகைய சம்பவம் நேர்ந்து விட்டதால் தான் ஜெயிலுக்குப் போகவேண்டும் என்கிற வேட்கை மிகுதியினால் அது விஷயமாகவே வாய்ப் பிதற்ற வாரம்பித்தாள். இரவு முற்றும் ஸாவித்திரியின் பிதற்றல் ஜன்னி கண்டதற்கு மேலாகிவிட்டது. நாகஸாமி ஜுரம் வராமலிருக்கின்றதா என்று தொட்டுப் பார்த்த வண்ணமிருந்தான். நடு நிசியில் நல்ல ஜுரமும் வந்துவிட்டது கண்டு நாகஸாமியின் உயிர் துடித்து விட்டது. “ஐயோ! ஸாவித்திரி! என்னை மோசம் செய்து விடுவாய் போலிருக்கிறதே! நான் என்ன செய்வேன்? என்னறிவு பெற்ற காலை உன்னை இழக்க நேரிடும் போல விருக்கிறதே! ஹா! மதனகோபாலா! இதோ தொட்டுப் பார். ஜுரம் வந்துவிட்டதே:........இதோ கருவியில் ஜுரம் 103 டிகிரி காட்டுகின்றதே! ஜுரம் வந்தால் இது உபயோகமில்லை என்று டாக்டர் தெரிவித்தாரே! ஜுரம் வந்து விட்டதே! என்ன செய்வது?” என்று மிக்க கவலையுற்றுக் கண்ணீர் வடித்தான்.

உண்மையில் மதனகோபாலனுக்குள்ள பயத்திற்கோர் அளவே இல்லை. ஸாவித்திரியின் முடிவு கிட்டி விட்டதே என்று பெருந் துக்கத்திலாழ்ந்தான். அவள் உயிரோடிருக்கையிலேயே முகத்தில் விழிக்கவும், பார்த்து மனந் தேறவும் ரங்கமணிக்குத் தந்தி கொடுக்கத் தீர்மானித்தான். அப்போது இரவு அகாலமாகையினால் விடிந்தவுடன் கொடுப்பதென்று நிச்சயித்தான். ஸாவித்திரியின் முகத்தின் அப்போதைய தெளிந்த களையைக் கண்டு மதன

வினு—எந்த விஷயத்தில் சாந்தம் காட்டவேண்டும்?

விடை—பத்திரிகை தாமதமாகப் பெறுவதில்தான் பத்திராதிபர்மீது சாந்தத்தைக் காட்டவேண்டும்.

கோபாலனின் உள்ளம் தவிக்கின்றது. ஹா! என்னருமை ஸாவித்திரீ! உன் முடிவு இத்தனை சமீபத்தில் இருக்கிறதென்று நான் கனவிலும் கருதவில்லையே! பாவிக்கு சதாயுஸ் என்பது போன்று நீ துன்பத்தை யனுபவித்தவாறு வெகு காலம் இருப்பாய். உன்னைச் சம்ரக்ஷணை செய்பவர்களற்று என்ன அவஸ்தைப் படுவாயோ! என் காலத்திற்குப் பிறகு உன் கதி யாதாகுமோ!" என்றெல்லாம் நான் பலவிதத்திலும் பலமாக யோசித்த வண்ணமிருந்தேனே! என் செல்வமே! "ஏன் கவலைப் படுகிறாய். நான் ஒருவருக்கும் சிரமமின்றிப் போய் விடுகிறேன்." என்று கூறிவிட்டுக் கிளம்பினாயே! ஹா! நான் என் செய்வேன்? என் பாழுங் கண்களினால் இந்த கோரங்களைக் கண்டு சகிக்கவோ இப் பூமியில் ஜெனித்தேன். ஐயோ! என் பானுமதியைக் கண்டது போதாதா! உன்னையுமா இன்னிலையில் பாவி நான் காண வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நீ உன் பர்த்தா நல்வழிப்பட்டு தேசத்திற்குழைக்க வேண்டுமென்று வேண்டித் தொழுதாயே! உன் பர்த்தா நல்வழிக்கு வந்தவுடனே உன்னுயுள் முடிந்துவிடுங் காலம் வந்துவிட்டதே! நீ இந்த ஆநந்தத்தை ஒரு வினாடி கூட அடையாது அநியாயமாய் மாளப் போகிறாயே! என்ன கோரமான பரீக்ஷை இது? ஹா! ஈசா! என்னுடன் பிறந்த இரு சோதரிகளால் நான் ஒரு தினமேனும் இன்பமடையாவிடினும் அவர்களை உயிருடனாவது கண்டு களித்தேன். அதற்கும் பஞ்சம் வந்துவிட்டதே! ஹா! ஸாவித்ரீ! உனது வாய்ப் பிதற்றலிலுமா தேச விஷயமே வருகிறது. என்ன பக்தி! என்ன பக்தி! என்னருமைச் சோதரீ! உனக்குள்ள தேசபக்தியின் ஆசை முற்றும் தீர உழைத்துச் சந்தோஷப் படுவதற்குள் கடவுள் உன்னைத் தன்னடி சேர்த்துக் கொள்ளத் துணிந்து விட்டாரே! உன்னரிய பக்தியைப் போன்று இனி உலகில் வேறு யாருக்கேனும் காணக் கிடைக்குமா! ரங்கமணி வரும் வரையில் உன்னிலைமை எவ்வித மிருக்குமோ!

வினா—தபாலாபீஸ் பஞ்சமாகாதபடி ஆதரிக்கும் அன்பர்கள் யாரையா!

விடை—பத்திரிகையின் சந்தாதாரர்களில் சிலர் பத்திரிகை தாமதத்தின் நோடீஸைக் கண்ணுற்றும் குறித்த தேதியில் வரவில்லை என்கிற ஆத்திரத்தினால் பத்திராதிபருக்குக் கடிதம் எழுதித் தபாலாபீஸுக்கு ஆதரவளிக்கிறார்கள். பத்திராதிபரையும் குறை கூறுகிறார்கள்.

என்ன பாவம் செய்து நான் உயிர் வாழ்கிறேன். என் கண்மணி! பானுமதி! நீ சென்றது போதாமல் இந்த அணங்கையுமா அழைத்துக் கொள்ள வந்து விட்டாயோ என் காதலீ! என் இன்ப வடிவே! நீ எங்கேயோ தெய்வமாக மறைந்து இருந்து இத்தருணம் என் சகோதரிக்கு உயிர்ப் பிச்சையை அளித்து அவள் புருஷனுடன் இன்பமாக தேச சேவை செய்யும்படியாக வரமளிக்கலாகாதா! என் ஒருயிர்ச் சோதரியை நான் பிரியாதிருக்க நீ கிருபை செய்யலாகாதா! நீதான் என்னை மோசம் செய்துப் பறந்து விட்டனை. இவளையுமா இழுத்துக் கொள்ளப் போகிறாய். வேண்டாம்; வேண்டாம். என் கண்ணே! பானு! பானு! என் சகோதரியை என்னிடமே விட்டு விடு. அவள் வாழ்நாளில் இன்பம் என்பதைக் கனவிலும் கண்டறிந்ததில்லை. அவளுக்கு நற்காலம் இப்போதே பிறந்திருக்கிறது. இச்சமயம் அவளை விட்டு விடு" என்று பலவிதமாகக் கூறிப் புலம்பிக் கொண்டே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

நாகஸாமியின் புலம்பலை வரைதலே சாத்யமன்று. ஏறக்குறைய அவனும் உயிரற்ற—பிரக்ஞையற்ற—பிணமாகவே ஆய்விட்டான். ஸாவித்திரியின் நிலைமை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவளுக்கு உண்மையில் ஜன்னியே கண்டு விட்டது. ஜன்னியின் வேகத்தில்....ஐயா! தயவு செய்து கள்ளை—சாராயத்தைக் குடிக்காதேயுங்கள். என் சகோதரிகளே! கதரைக் கட்டுங்கள்.....காந்தியா நிற்பது...மகாத்மா காந்திக்கு ஜே!....வந்தே மாதரம்....கலியுகத்தில் பேசும் தெய்வம் தாங்களல்லவா!....ஹா! கண்மணி! பானுமதியா! என்னன்பே! வந்தனையா; வா!....அண்ணா! பானுமதி பாருங்கள்....இதென்ன தேசியக் கொடியை நானா உயர்த்த வேண்டும்........என்னப்பனே! கடவுளே! தேசம் விடுதலை யடையுமா!....ஜெயம் ஏற்படுமா!........சீச்சி! தூரச் செல்லு....போடா! தடிப்பயலே! கள்ளு மொடாவை உடைத்தெறிபடா!........அண்ணா! அண்ணா!....நாதா! நாதா! ரங்கமணி! திலோத்

வினா—ஏனையா முகம் விளக்கெண்ணை சாப்பிட்டதுபோலிருக்கிறது?

விடை—போனையா! காங்கிரஸ்காரர்கள் வந்து கால் ரூபாய் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். காசு போவதென்றால் லேசா!

தமா!........நீ சென்ற சிறைச் சாலைக்கு நானும் வருவேன். ஜெய லக்ஷ்மீ! நானும் வருவேன். இதென்ன தாமரைக் குளம் எங்கிருந்து வந்தது........குளத்தில் குளிப்பது கஸ்தூரிபாய் காந்தியா! இதோ நானும் வருகிறேன். என் தாயே! லோக மாதாவே!........ சீச்சீ! என்னெதிரில் நிற்காதே ஓடு........நாதா! மறியல் செய்வீர்களா! கள்ளுக் கடையை ஒழிப்பீர்களா! கதரைக் கட்டுவீர்களா!..... அண்ணு! துப்பறியும் நாயுடு வந்திருக்கிறாரே!........நாயுடுகாரு வாருங்கள். வாருங்கள்................உண்மையிலா காந்திஜீ........என்று சம்மந்த மில்லாது ஏதேதோ வாய்ப்பிதற்றுகின்றாள்; எழுந்து எழுந்து அலறி உட்காருகிறாள். மீண்டும் படுக்கிறாள். இவ்வித மான சித்திரவதையில் தத்தளிக்கும் நாரீமணியைக் கண்டு சகிக்காது வருந்தியவாறு இருவரும் அடித்த வண்ணம் வீற்றிருக்கையில் மதனகோபாலனின் வேலையாள் அந்த நிசி வேளையில் ஆஸ்பத்திரியைத் தேடிக்கொண்டு ஓடி வந்தான்.

அவன் வருகையை யறிந்த மதனகோபாலன் அலறிச் சென்று பார்க்கையில் வேலையாள் ஓர் தந்தியைக் கொடுத்து "சாமீ! இப்போதுதான் இந்த தந்தி வந்தது. அர்ஜெண்டு தந்தியாக விருந்ததால் இதை எடுத்துக் கொண்டு ஓடி வந்தேன்" என்றான். உடனே கோபாலன் கவரைத் திறந்து வெகு விரைவில் தந்தியைப் படிக்கலானான்.

"ஆபத்து! ஆபத்து!

இரவு ஒன்பது மணிக்குமேல் உமது சகோதரி ரங்கமணி யம்மாள் தன் கணவனாலேயே ஓட்டப்பட்ட மோட்டாரில் அகப்பட்டுக் கொண்டு குற்றுயிராக ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள்.

வினா—அட கர்மி! நீ இதுவரையில் செலவிட்டதைக் கணக்கிட்டால் தொகை எத்தனை பெரியதாக இருக்கும்? அதில் வீணில் செலவானது எத்தனை இருக்கும், காலணாவிற்கு நாக்கை வளைக்கிறாயே! உனக்கு தேச பக்தி இல்லை!

விடை—எனக்குப் பிரதானம் காசு பக்தி தான். தேசபக்தியுமாச்சு எல்லாம் ஆச்சு. காலணா—ஐயோ! நாற்பத்தியெட்டு தம்பிடி சும்மாவா வருகிறது. வயிறு எரிகிறதையா!

> குழந்தைகளின் பரிதாபம் தாங்கக் கூடவில்லை. அனாதைகளாகத் துடிக்கின்றார்கள். உடனே ஸாவித்திரியை அழைத்துக் கொண்டு வரவும். இப்போதே வந்தால் முகத்தில் விழிக்கலாம்.
>
> அடுத்த வீட்டு அனந்தன்.”

அந்தோ! அத் தந்தியைப் படித்தான். தன்னிலை யழிந்து “ஹா!” என்று கதறியவாறு நிலத்தில் சாய்ந்தான். அருகிலிருந்தவர்களால் மூர்ச்சை தெளியச் செய்து எழுந்திருக்கலானான். ஒரே சமயத்தில் இரு சகோதரிகளுக்கும் இத்தகைய பேராபத்து வந்து விட்டதைக் கேட்டுச் சகிக்கக் கூடாது போய்விட்ட மதனகோபாலன் சிறு குழந்தையைப் போல “ஹா! என் செல்வச் சோதரிகாள்! உங்களை ஏக காலத்தில் பறி கொடுக்கும் மாபாவியாகி விட்டேனே! இத்தகைய பேரிடி போன்ற நிலைமை எனக்கு வருமென்று நான் கனவிலும் கருதவில்லையே! என் வாழ் நாளில் நான் கண்ட இன்பம் ஒவ்வொருவரையும் பறிகொடுப்பதுதானா! ஐயோ! என் ரங்கமணி! உன் முடிவும் அக்கெடுமதியனான வேசிலோலனின் கரத்தினாலா ஏற்பட வேண்டும்? என்ன அநியாயம். ஐயோ! கடவுளே! என்னை இவ்விதமா சோதிக்கவேண்டும்? நான் இவளுடைய செய்தியை உனக்கு நானே தெரிவிக்க எண்ணியவளவில் உன்னுடைய செய்தியை இன்றே கேட்டுவிட்டேனே! என் செய்வேன்! ரங்கமணி!... ....ஹா.... ஸாவித்திரி!....என்ன விதி! உங்களிருவரையும் பறிகொடுத்துப் பின் நான் இப்பூவுலகில் வாழ்வதா? சீச்சீ! ஒரு வினாடியும் இருப்பதற்கு என் மனம் இடந் தராது. என் பானுமதியுடன் என்னாவி பாதி நீங்கியது. இவர்களோடு முற்று மொழிய வேண்டியதுதான்........ ஐயோ! இச் செய்தியை ஸாவித்திரிக்கு அறிவிக்கலாகாது ...ஆகா! கலியின் கொடுமையே! காலப்போக்கின் தீமையே! என் சோதரி மணிகாள்! உங்களுக்கு முன் பிறந்த நான் இருக்க என் முன்னிலை

வினா—என்ன ஐயா! போலீஸ் உத்யோகஸ்தரே? உமது மனைவியார் நேற்று நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்கு வந்திருந்தார்களே! வரலாமா!

விடை—என் மனைவியையும் நான் என் உத்யோகத்தில் பழக்குகிறேன். அவள் அங்கு வி. ஐ. டி. யாக வந்திருந்தாள். அதிலென்ன குற்றம்?

யில் நீங்களோ செல்வது.......கூடாது...,கூடாது"......., என்று தத்தளிக்கின்றான்.

இவ் விஷய மறிந்த அருகிலுள்ளவர்கள் எல்லாம் கண்ணீர் சொரியக் கலங்குகின்றார்கள். மதனகோபாலனுக்கு எவ்விதம் தேறுதல் கூறுவதென்றே தெரியாது விழிக்கின்றார்கள். நாகஸாமியோ ஸாவித்திரியின் அருகிலிருக்கிறான். "இன்னும் மதனகோபாலன் வரவில்லையே! என்ன செய்தியாக விருக்கும்?" என்று எண்ணி அதை அறிய அவனும் எழுந்து வந்தான். அங்கு வந்த விடத்தில் விஷயம் இன்னதென்று தெரிந்ததும் நடுங்கினான். ஹா! ஏக காலத்தில் இருவரின் கதியும் இவ்விதமாகிவிட்டதா? என்ன அனியாயம்! இரு சகோதரிகளைப் படைத்த இம் மனிதனுக்கு அவர்களால் இது பரியந்தம் துன்பம் நிறைந்திருந்தது. இறுதியில் இருவரும் ஏககாலத்தில் இறந்துபோய் அத் துயரத்தை என்றும் தீராது மாறாது வைத்து விடுவார்கள் போலிருக்கிறதே! மதனகோபாலா! உனது நிலைமைக்கு யார்தான் என்ன தேறுதல் கூற முடியும்? வெகு விசனகரமான சம்பவ மல்லவோ நேர்ந்துவிட்டது!" என்று கூறினான்.

மதன:—அப்பா! நாகஸாமீ! நான் என்னிரு கண்மணிகளைப் போன்று இவ்விரு பெண்மணிகளையும் எண்ணி ஏகாங்கியாய் உயிர் வாழ்ந்தேன். எனது துரதிருஷ்டவசம் இன்றோடு பூர்த்தியாகி விடுமோ என்று எண்ணுகிறேன். என்னுடைய இரு செல்வங்களும் போனபிறகு எனக்கு இவ்வுலகில் என்ன வேலை இருக்கிறது. ஹா! அவர்களைப் பிரிந்து நான் அரை நிமிடமும் இருக்கமாட்டேன். நாகஸாமீ! இவ் விஷயத்தை ஸாவித்திரி இடத்தில் தெரிவிக்காதே! அவள் உயிர் பிறகு செல்லவேண்டியது முதலிலேயே போய்விடும். நீ அவளை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள். ஸாவித்திரிக்கு ஒரு

வினா—ஏனையா காலக்ஷேபகரே! நீர் கதை செய்கையில் சங்கீதம் பாடும்போது கையை உயரவும், பின்புறமாயும் ஆட்டுகிறீரே! ஏன்?

விடை—இது தெரியவில்லையா? சங்கீதம் என்னிடமில்லை. பின் பாடகரிடமிருக்கிறது அங்குக் கவனியுங்கள். எனக்குச் சங்கீதம் பாடுதற்கு லைஸென்ஸ் கிடையாது என்று தெரிவிக்கவே அப்படிச் செய்கிறேன்.

காலத்தில் தெளிவு உண்டாகி என்னை எங்கே என்று கேட்டால் நீ உண்மையைக் கூருது எங்கேயோ சென்றிருப்பதாகவும் இதோ வருவானென்றும் கூறிவிடு. நான் இப்போதே அங்கு சென்று அவ்விடத்திய நிலைமை எவ்விதமிருக்கிறதென்று தந்தி கொடுக்கிறேன்; நீயும் தந்தி படி. தாமதம் செய்யாதே. நான் இப்போதே ஒரு ஸ்பெஷல் மோட்டார் வைத்துக்கொண்டு ரங்கமணி இருக்குமிடத்திற்கு ஓடுகிறேன்" என்று கூறிவிட்டு உடனே புறப்பட்டுவிட்டான். அவன் தத்தளிக்கும் நிலைமையோ கூறச் சாத்யமன்று.

அவ்விடத்திலிருந்து நேரே தன் சிநேகிதன் வீட்டிற்குச் சென்று டெலிபோன் செய்து ஒரு மோட்டார்கார் வரவழைத்துக் கொண்டு இரவோடிரவாகப் புறப்பட்டு ரங்கமணி ஊருக்கு வந்து சேர்ந்தான். அப்போது விடியற்காலம் 4 மணி இருக்கும். ரங்கமணி வீடு பூட்டப்பட்டிருந்தது கண்டு அக்கம் பக்கத்தில் சென்று "குழந்தைகள் எங்கே?" என்று விசாரித்தான். ஆஸ்பத்திரியில் பெரிய பெண்ணும் பிள்ளையும் இருப்பதாயும்,மற்ற குழந்தைகள் தம்மிடமே தூங்குவதாயும் தெரிவித்து ரங்கமணிக் குற்ற ஆபத்தை எண்ணி வருந்தினர்கள். உடனே மதனகோபாலன் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்று தான் இன்னுரென்று தெரிவித்து அதிகாரிகளின் உத்தரவுபெற்றுக்கொண்டு உள்ளே சென்றான். ரங்கமணி தலையில் பெருத்த கட்டுடன் ஸ்மாரணை யற்று அலங்கோலமாகப் படுத்திருக்கிருள். அவளருகில் பெண்ணும், பிள்ளையும் கண்ணீர் சோரவிட்ட வண்ணம் உட்கார்ந்திருக்கிருர்கள். நர்ஸ் வெகு கனிகரத்துடன் சிகிச்சைசெய்து வருகிருள்.

அச்சமயம் அருகில் சென்ற மதனகோபாலனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. கோவெனக் கதறிப் புலம்பிவிட நினைக்கின்றான். ஆஸ்பத்திரியில் இன்னும் எத்தனையோ நோயாளிகள் படுத்திருப்பதைப்

ஒரு வேலையை எப்படியாயினும் இன்று செய்து முடித்துவிடவேண்டுமென்கிற உறுதி மனத்திலேற்படின் அன்று தேகம் அசௌக்கியத்தோடு பட்டினியுடனுமிருப்பினும் அவ்வேலை தீவிரமாக முடிந்துவிடுகின்றது.

பார்த்ததும் அவர்களுக்கு உபத்திரவமாகத் தான் புலம்பலாகா தென்று எண்ணி தன்னையே தான் தேற்றிக்கொண்டு அமர்ந்தான். இவனைக் கண்ட ரங்கமணியின் குழந்தைகளிருவரும் "மாமா! மாமா! எங்கம்மாவின் கதி இவ்விதமாகிவிட்டதே! என்ன செய்வேன்? எங்களை அனாதையாகத் தெருவில் விட்டுவிடப் போகிறாளே! ஐயோ! மாமா! எங்கம்மாவுக்கு குணமாகுமா! எங்கம்மா சுகமாக எழுந்திருப்பாளா! எங்கம்மாளை நாங்கள் உயிரோடு காண்போமா! மாமா!" என்று பெரிதாகக் கத்திப் புலம்ப வாரம்பித்துவிட்டார்கள். குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு சகியாத மதனகோபாலன் இரு குழந்தைகளையும் வாரி அன்போடு அணைத்துக்கொண்டு "என் செல்வங்களே! வருந்தாதீர்கள். கண்ணீர் விடாதீர்கள். அம்மாவுக்கு நன்றாகக் குணமாகிவிடும். நாளையே அம்மா சுகமாக எழுந்துவிடுவாள். நீங்கள் தைரியமாயிருங்கள்; கடவுளை நம்புங்கள். கடவுள் உங்களுக்குக் குறைவு செய்யமாட்டார்" என்று மேலுக்குக் குழந்தைகளுக்கு தைரியம் சொல்லுகிறானே யன்றி அவன் மார்பும் மனமும் வெடித்து விடும் போலத் துக்கம் தொண்டையை அடைக்கிறது. சமாளித்துப் பேசக் கூடாது தவிக்கின்றான்.

ரங்கமணியின் பெண் மதனகோபாலனின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "மாமா! நாங்கள் எவ்வளவோ தைரியமாகவிருக்கத் தான் பார்க்கிறோம்; எங்களால் கூடவில்லையே! என் பிதாவென்று சொல்லிக்கொள்ளக்கூட வெட்கமாக இருக்கிறது. அவர் என் தாயைச் செய்த கொடுமைகள் ஒன்றிரண்டல்ல. அவைகள் நீங்கள் அறியாதவை யன்று. அத்தனை தீமைகளையுஞ் செய்து வதைத்தது போதா வென்று தன் கரத்தினாலேயே மோட்டாரை ஏற்றிக் கொன்றுவிடவும் துணிந்துவிட்டாரே! ஹா! மாமா! பொறுமைக்கு பூமிதேவி என்றல்லவா எம் அன்னையைக் கூறவேண்டும். என் தந்தைக்கு எத்தனை இதமான புத்திகளைக் கூறினும் அவற்றைச் சற்றும் காதில் கேளாது மூர்க்கத்தனமாக நடந்துகொண்டு எவ்வளவு

ஒரு சிறிய காரியத்தை நாமே செய்யச் சோம்பலுற்று மற்றவர்களை செய்யச்சொன்னால் அது சரியாக நடப்பதேயில்லை; அதனால் கஷ்டமனுபவிப்பவர் நாமேயன்றி அவர்களல்ல.

அவமானப் பட்டிருக்கிறார். என் தாயார் ஒவ்வொரு வினாடியிலும் அவருக்குப் போதித்தது கொஞ்சமன்று. சென்ற மாதம் ஒரு கலியாணார்த்தம் வெளியூருக்குச் சென்றிருந்தோம். அங்கு கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களில் ஒருத்தியை ஏதோ பேசிப் பக்குவம் செய்துவிட்டார்போல விருக்கிறது. இரவு எல்லோரும் நித்திரை செய்தபிறகு அவள் குறிப்பிட்டிருந்த விடத்தில் படுத்திருக்கிறதாக நினைத்து என் தந்தை இருட்டில் வந்து வேறொரு மாதைத் தொட்டு விட்டதால்,அக் கல்யாண வீடே அமர்க்களப்பட்டுப் போய் எல்லோருமாக என் தந்தையை கையப் புடைத்துக் காரி யுமிழ்ந்துத் தள்ளினார்கள்.;இரவோடிரவாக நாங்கள் ஊர் வந்து விட்டோம். மற்றொரு சமயம் ஆபீஸ் வேலையின் நிமித்தம் ஒரு ஊருக்குச் சென்றிருக்கையில் அங்குள்ள அடுத்த வீட்டு மாதினிடம் முன் பேச்சுடன் அவ் வீடு செல்லத் தயாராகி விட்டார். அவ் வீட்டுக்காரன் வீதிக் கதவு, கொல்லைக் கதவு முழுதும் போட்டுவிட்டான். ஆகையினால் கொல்லைப்புறமுள்ள சுவற்றின் வழியாக ஏறிக் குதித்தார். அப்போது தடுக்கி பொத்தென்று கீழே விழுந்துவிட்டாராம். உடனே இவ் வோசையைக் கேட்டு வீட்டுக்காரர்கள் வந்து அந்தப் பெண்ணையும் என் தந்தையையும் பெரிய கயிற்றால் பிணைத்துக் கட்டி 'உதை, உதை' என்று உதைத்துத் தள்ளி அவர்களது செய்கையை அப்படியே வெளியிட்டு விடுவதாகக் கூறினார்களாம். அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டு அங்கிருந்து காலில் அடியுடன் தப்பித்துக்கொண்டு வீடு வந்தார். நான் சிறுமியாக விருந்த காலத்திலேயே இவர் யாரையோ ஒரு பெண்ணைக் கற்பழித்ததாயும் அதையறிந்த அவள் புருஷன் இவர் மீது கறம் வைத்துக் கொண்டு சமயம் பார்த்திருந்தானும். இதை யறியாத என் தந்தை அந்தப் பெண்ணின் வீட்டிற்கு அவளைப் பார்க்கச் சென்றாராம். அப்போது அவள் புருஷனே நேரில் வந்து என் தந்தையை வாயில் வந்தவாறு திட்டி, குடத்தோடு தண்ணீரைத் தலையில் கொட்டி தடியாலடித்துக்

தங்கள் மகன் போக்கையும், அவன் புத்திக் குறைவையும் சற்றுமறியாத மாதா பிதாக்கள் உலகில் அனேகரிருக்கிறார்கள். அவர்களுக்கு எத்தனை கூறினும் நீதி புலப்படுவதே இல்லை. [illegible] முதன்மையாக நிற்கின்றது.

21657

கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே வீதியில் வந்து காரியுமிழ்ந்து உதைத்தானும்....மாமா! இவ்விதமான ஆபாஸங்களெல்லாம் அவர் செய்ததும் பட்டதும் கணக்கு வழக்கில்லை. இவைகளைப் பற்றி அம்மா பேச ஆரம்பித்தால் அவளை உயிர் இல்லாதபடி அடித்துப் போட்டுவிட்டுப் போய் விடுவார். அப்பப்பா! அவரால் அம்மா அடைந்த துன்பம் கூறத்திறமன்று. அதை நினைத்தாலும் பயமாக விருக்கிறது. இத்தனை இம்சைகளையும் சகித்திருக்கும் அம்மாவை 'நீ சாகமாட்டாயா! சாக மாட்டாயா!' என்று திட்டுவார். நானும் தம்பியும் வயதான பிறகு அவரையே நேரில் திட்டுவதுடன், என் தாயார் மீது அடி விழாதபடி தடுத்து விடுவோம். இத்தகைய கொடுமைகளை எல்லாம் செய்த பாவியாகிய என் தந்தை நேற்றிரவு மோட்டாரை ஏற்றிய உடனே இச் செய்தி காற்று வேகமாக எனக்கு எட்டியது. நானும் தம்பியும் மற்றைய குழந்தைகளும் ஓடி வந்தோம். அம்மாவுக்கு அப்போதே நினைவு தப்பிவிட ஆரம்பமாகி விட்டது. அந்த சமயம் என் மனம் பதறிய பதறலை மாமா! நினைத்தாலும் நடுங்குகின்றது. அம்மாவின் உயிர் நீங்கிவிட்டதாகவே நினைத்துக் கத்தினேன்; கதறினேன். அம்மா என்னை அருகில் அழைத்து 'மாமாவுக்குத் தந்தி கொடு; சித்தியை அழைத்துக்கொண்டு வரச்சொல். மாமாவிடம் நடந்த எல்லா விஷயத்தையும் எடுத்துக்கூறு. நான் ஒருகால் மாமா வருவதற்குள் இறந்துவிடுவேனேயானால் நான் உன்னோடு இப்போது தெரிவிக்கும் விஷயத்தை அப்படியே மாமாவிடம் கூறிவிடு; நாணமடையாதே. திக்கற்ற உங்களை ஆதரிக்கும் கர்த்தா மாமாதான். உன்னை மணக்கும்படியாக நான் மாமாவிடம் பதினுயிரந்தரம் சொல்லியதாகக் கூறு. என்னுயிர் மறைந்ததால் நீங்கள் விசனப் படாதேயுங்கள். மாமாவே நானாக பாவித்து அவரிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள். உங்களுக்குச் சத்ருவாகிய தந்தையின் வார்த்தையை நீங்கள் கேட்க வேண்டாம். மாமாவுக்கு உடனே

கட்டுப்பாட்டிலும் கட்டாயத்திலும் தன் மனைவியை நடத்துகிறார்கள் சில மூடர்கள். சொந்தமான திடசித்தமில்லாதவர்கள் இந்தக் காவலுக்கு அடங்குவார்களா! மனத்தையறிந்துசெய்யும் காவல்தான் சிறந்த காவலாகும்.

தந்தி கொடு. மாமாவை நீ மணந்து கொள்." என்று பத்துதரம் பேசக் கூடாமல் திணறிக் கொண்டே பேசினாள். அப்போது அருகிலிருந்தவர்களெல்லாம் அதைக் கேட்டுக் கண்ணீர் விட்டுக் கதறினார்கள். அப்போது என் தந்தையின்மீது எனக்குண்டாகிய சீற்றத்தைக் கூறத் திறமன்று. வாயில் வந்தவாறெல்லாம் திட்டி விட்டேன். தந்தை என்று தாக்ஷண்யம் பார்க்கவில்லை. எனது ஆத்திரம் பொங்கி விட்டதால் மரியாதையும் மறைந்தது. என்மீது என் தந்தைக்குக் கோபம் வந்திருப்பினும் நான் அதை லக்ஷ்யம் செய்யவில்லை. அதற்குள் கூட்டம் கூடி விட்டது. போலீஸாரும் வந்து விட்டார்கள். அம்மா தலையில் அடிபட்ட ரத்தம் வெள்ளம் போலப் பெருகவாரம்பித்தது. நான் என் துயரம் தீர தாயின்மீது விழுந்து புரளவும் விடாது என்னை எல்லோரும் பிடித்துக் கொண்டார்கள். போலீஸார், வாக்குமூலம் வாங்குவதற்குள் அம்மாவுக்கு நினைவு மாறிவிட்டது. அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் போலீஸார் அப்பாவின் குணத்தையும், வீட்டில் எப்படி நடக்கிறார் என்ற நடவடிக்கைகளையும் பற்றிக் கேட்டபோது அவர்களும் ஆத்திரத்துடன் அம்மாவை தினம் கொலை செய்யவே நினைத்ததாயும், வெகு இம்சைகளை மனந்துணிந்து செய்ததாயும் அவைகளுக்கெல்லாம் அவ்வுத்தமி பொறுத்திருந்ததாயும், ஆபீஸில் வேலையும் போய்விடக் கூடிய நிலைமையில் இருந்ததாயும், பிறகு சம்பளம் குறைந்துவிட்டதாயும் சகல விஷயங்களையும் ஒன்று விடாது கூறி விட்டார்கள்.

இவ்விதம் தன் கதி முடிந்ததையும், அம்மா ரத்தத்தின் மத்தியில் கிடப்பதையும் கண்ட பிறகுதான் என் தந்தைக்கு மனம் சற்று மாறத் தலைப்பட்டது. உடனே அவர் என் தாயினருகில் வந்து பார்த்துக் கண்ணீர் உதிர்த்தார். அப்போது எனக்கிருந்த மன வருத்தத்தினால் "அவளை உயிருடன் வதைத்தும் சாகாமையினால் மோட்டாரும் ஏற்றிக் கொலை செய்யத் துணிந்தாயிற்று. இன்னும் அரு

ஓயாது துக்கத்தினால் சதா கவலைப்பட்டுக்கொண்டே இருக்கும் ஒரு உயிரைப் பார்த்தால் கல்லும் கரைகின்றது. ஆனால் அத்தகைய துன்பத்தைக் கொடுக்கிற சண்டாளர்களுக்கு மனத்தில் இரக்கம் என்பது இம்மையில் இல்லை, மறுமையிலும் இருக்காதுதான்.

இல் வந்து கண்ணீர் உதிர்க்க வேண்டுமோ! போதும் மரியாதை; போதும் அன்பு. அந்தப் பிராணன் சீக்கிரம் போகவில்லையே என்று அதையும் மென்னியைப் பிடித்து அழுத்தப் பார்க்கிறீரா! அருகில் வரவேண்டாம். போம் வெளியில்" என்று நான் தள்ளிவிட்டேன். போலீஸாரும் அவர்மீது அருவருப்பு கொண்டார்கள். பிறகு அவரைக் கைதியாக்கி விட்டார்கள். அவரைக் கைதியாக்கிப் பிடித்துக் கொண்ட பிறகே அவர் முகம் வாட்டமடைந்து பலவிதமான குறிப்புகளைத் தோற்றுவித்துத் தலை குனிந்தது. அப்போது காலம் இரவு 11 மணிக்கு ஆய் விட்டதால் ஏதும் விசாரிப்பதற்கில்லாது அவரை ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லத் தயாராகி விட்டார்கள்.

என் தந்தையினுடைய துன்மந்திரிபோன்ற சண்டாள சிநேகிதர்களெல்லாம் துள்ளிக்குதித்து ஆர்ப்பாட்டம் செய்து "இந்த விபத்து வேண்டுமென்று நடந்ததல்ல, தானாக திடீரென்று நடந்து விட்டது. இவன் குற்றவாளியேயல்ல. நீங்கள் கைதியாக்கியது பிசகு" என்று தடபுடல் செய்தார்கள். அதற்குப் போலீஸார் உங்கள் சிபார்சை நாங்கள் நாடவில்லை. வண்டியை ஓட்டுபவன் வீதியிலுள்ள ஜனங்களுக்கோ, மற்ற எதற்கும் ஒருவிதமான தொந்தரவும் விபத்தும் நேராமல் ஜாக்ரதையாக நிதானமாய் ஓட்டவேண்டியது. அந்த விதமல்லாது அஜாக்ரதையினால் அதிகமான வேகத்தில் ஓட்டியதனால் தான் இவ்விதம் விபத்து நேர்ந்தது என்பதற்கு எங்களுக்குப் போதிய சாக்ஷியும் கிடைத்துவிட்டது. ஆகையினால் நாங்கள் சட்டப்படிக்குக் குற்றவாளியைக் கைதியாக்கிச் செல்கிறோம். நாளை விசாரணையில் மேல்படி நடக்கட்டும்" என்று கூறி என் தந்தையை ஸ்டேஷனை நோக்கி அழைத்துச் சென்றார்கள். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவராவது என் தந்தையை வையாதவர்களில்லை. அவரைக் காரியுமிழ்ந்து தூற்றினார்கள். பிறகு அம்மாவை இங்கு கொண்டுவந்து விட்டார்கள். நானும் தம்பியும் அம்மாவிடமே இருப்பதற்கு உத்

வற்றாக் கண்ணீர்விடவே சிலர் ஜெனிக்கின்றார்கள்போலும். அந்தோ! அவ்வாறு கண்ணீர்விடக்கூடியவர்களின் மனத்தில் எத்தகைய வேதனை இருக்க வேண்டும். எத்தனை சங்கடங்கள் ஒன்றுகூடின் அவ்வாறான நீர்ச்சுனை கண் மூலம் ஓடும். ஐயோ! ஈசா! இவ்விதமான ஜன்மத்தை ஏன் படைத்தாய்?

தாவு பெற்றுக் கொண்டோம். மற்றய குழந்தைகளை பக்கத்து வீட்டுக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரர்களே உங்களுக்குத் தந்தி யடித்தார்கள். மாமா! இந்த ராமாயணத்தைக் கூறிக்கொண்டே சென்றால் ஒருபோதும் முடியவில்லை. அம்மா பிழைப்பார்களா! அம்மாவுக்கு ஒன்றும் பயமில்லையா! ஏன் சித்தியை அழைத்துக்கொண்டு வரவில்லை?" என்று கேட்டாள்.

இந்த கதைகளை எல்லாம் கேட்ட மதனகோபாலனின் மனம் பதைக்கின்றது. கண்களில் தாரை வழிகின்றது. ரங்கமணியைப் பார்த்தாலோ பயமதிகரிக்கின்றது. கண்ணைத் திறப்பாளோ என்று நினைத்து எதிர்பார்ப்பதெல்லாம் ஏமாற்றமாகின்றது. மதனகோபாலன் ஸாவித்திரி வராமைக்கு என்ன காரணம் சொல்வதென்று யோசிக்கின்றான். அதோடு தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படியாகக் கூறிய வார்த்தைக்கு என்ன பதில் சொல்வதென்று பெருத்த குழப்ப முண்டாகி விட்டது. கல்யாணமென்னும்போதே மனம் வெறுப்புற்று வெருவாய் வருந்துகின்றது. இந்த நிலைமையில் அவன் அப் பெண்மணியின் கரத்தைப் பற்றிக்கொண்டு "அம்மா! ஸாரநாயகி! இத்தனை நேரம் நீ சொல்லிய விஷயங்களைக் கேட்க என் மனம் சொல்லவியலாத விசனத்தால் தவிக்கின்றது. அக்காவுக்கு இத்தகைய ஆபத்து வரும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என்னுடைய துரதிருஷ்டவசத்தினால் நான் தற்போது மகத்தான துக்க ஸாகரத்தில் மூழ்கி இருக்கிறேன். யாரை நொந்து—யாரை வைது—என்ன பயன். விதியை வெல்ல யாராலுமாகாதல்லவா! அந்த விதிதான் இவ்விதம் மூண்டு விட்டது. நீ வருத்தப் படாதே. நாம் உலகத்தில் எப்போது ஜெனித்தோமோ, அப்போதே சுக துக்கங்களுக்கு ஒரு பங்குதாரியாக ஆய் விட்டோம். இன்பம் வரினும் துன்பம் வரினும் அவைகளைச் சமமாக பாவித்து உணர்வதற்கான ஆத்ம சக்தியை நாம் முதலில் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். நம்

கொண்ட கணவன் கொடியவனாயின் பெண்டின் வாழ்க்கை யோர் வாழ்க்கையா![3] சீச்சீ! எத்தகைய சங்கடத்தையும் சகிக்கலாம். மகளிற்குத் தன் பதி சரியில்லை யெனின் அதைவிட நாகம் வேறில்லை. பதி செய்யும் சதியை அறியாது பாவைமீது பழிகூறிப் பலன் யாது.

முடைய பிறப்பில் நாம் எந்தெந்த விதங்கள் அனுபவிக்கவேண்டுமோ, அவைகளுக்கு மனந்தளரலாகாது. "நம்முடைய தலையில் கடவுள் இவ்விதம் எழுதிவிட்டான்; ஆகையினால் நாம் அனுபவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்" என்று உறுதி செய்து கொள்ளவேண்டும். வீணாகக் கலங்காதே. நமக்கு இத்தகைய பரிபக்குவம் வருவது மிகவும் அரி தென்பது எனக்குத் தெரியும். என்னுடைய அனுபவத்தில் நான் பிறருக்குப் போதிக்க முன் வருலதற்குத் துணிகிறேனே யல்லாது நான் என் மனத்தை அடக்கச் சாத்பமில்லாது ஏமாறுகிறேன். எனி னும் எனக்கு விஷயம் தெரிந்திருப்பதால் பாசிபோல வந்து படரும் இப் பாசங்களை அகற்றி வேதாந்த மார்க்கத்தை மனத்துள் கொண்டு தேற்றிக் கொண்டே வருகிறேன். அதைப் பலதரம் கூறினால் மனத் தில் நன்றாகப் பதியும் என்றதனால் நான் அதையே உறுதியாகக் கொண்டு பிறருக்கும் கூறுகின்றேன். ஸாரநாயகி! நான் சொல்லப் போகும் ஒரு வார்த்தையினால் நீ மனம் கலங்காதே; திடுக்கிடாதே! அதோடு யுகம் புரண்டு விட்டதாக நினைக்காதே! எல்லாவற்றையும் அடக்கியாளுந் திறமைதான் முதலில் வேண்டும். என் விவாக விஷயமாக அம்மா சொல்லிய வார்த்தையை நீ மனத்தில் நினைக் காதே! அதை ஓர் பொருட்டாக மதியாது மறந்து விடு. அதற்கான வார்த்தைகளைப் பிறகு யோசிப்போம். அந்தகாரியத்திற்கு நான் அரு கதையல்ல வென்பதை நீயே அறிவாய். ஆகையினால் அதற்கு உரிமையுள்ள வேறொருவனைக் கடவுள் பிறப்பித்தே இருப்பான். இனிமேற்கொண்டு நடக்க வேண்டிய காரியத்தைச் செய்வோம். உன் தந்தையை நாம் வீணாக இனி நிந்திப்பதனால் அது அவருக் கும் நமக்கும் இளப்பமாகி விடும். "ஏதோ கர்ம காலத்தின் கொடுமை இவைகள்" என்று மனந் தேறவேண்டும்......ஸாரநாயகி! ஸாவித் திரி விஷயத்தின் உண்மை உன் மனத்தோடு இருக்கட்டும். அம்மா விடமும் மற்ற யாரிடமும் தெரிய வேண்டாம். (விஷயத்தைக் கூறி) இந்த நிலைமையிலிருக்கிறாள். அம்மா! என்னுடைய நிலைமையைப்

அன்னியர் செல்லும் வண்டியை சோதாத்தனமாகப் பின்பற்றிச் சென்று அதைச் சுற்றிச்சுற்றி வரும் சந்தேகப் பேய்கள் வேறு எந்தக் காரியந்தான் செய்யமாட்டார்கள்! அவர்கள் வீட்டில் மனைவியை செய்யும் கொடுமை இச் செய்கையினாலேயே நன்கு அறியலாம்.

பார்த்தாயா! நான் இப்போது உயிரற்ற சவத்திற்கு ஒப்பாகவே இருக்கிறேன். என் மனமே என்னை ஏமாற்றி விடுகின்றது. என்னுடைய மனத்திற்கு நான் கொடுக்கும் சாந்த உணவு கொஞ்சமன்று. என் பானுமதியை மறக்க நான் முயற்சிப்பது கூறத்திறமன்று. என் மனத்தை விட்டகலாது அவள் குடி கொண்டு விட்டாள்........உம்.... இக்கதைகளைப் பேசி வீண் பொழுதைப் போக்க வேண்டாம். எல்லாம் ஈசனருள் என்று நம்பி இரு" என்று தேற்றினன்.

உதயமாயது. எங்கும் இன்பகாரமான வெளிச்சமும், மந்தமாருதமானது சில்லென்று வீசவும், ஆநந்தமாகப் பறவைகள் சங்கீதம் இசைபாடவும் வெகு ரம்மியமாக இருக்கிறது. அத்தகைய இன்பகாரமான வேளையில் மதனகோபாலனின் முகத்தில் தெம்பற்று, வாட்டம் நிறைந்து அவன் உடைந்த மனத்துடன் உட்கார்ந்திருந்தான். ரங்கமணியோ கண்ணைத் திறக்கவில்லை. லாரநாயகியும் மதனகோபாலனும் தத்தளித்த மனத்துடன் ரங்கமணி யருகிலேயே வீற்றிருக்கையில் ரங்கமணி வீரென்று ஒரு சத்தமிட்டாள். உடனே கோபாலன் அவளருகில் சென்று "மணீ! மணீ! அன்பான ரங்கமணீ! இதோ நான் உன் பக்கலில் உட்கார்ந்திருக்கிறேன் பாரு. நான் பார் தெரியவில்லையா! ரங்கமணீ! உனக்கென்ன செய்கின்றது. ஏன் வீறிட்டுக் கத்தினுய்! இதோ பாரு! வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லு. என் செல்லமே! கண் திறந்து பாரு. உன் குழந்தைகள் அழுகின்றனவே! அதைப் பார்க்க வேண்டாமா? அனுதைகள் போலப் புலம்பும் உன் குழந்தைகளுக்காகவேனும் கண் விழிப்பாயம்மா! ரங்கமணீ!" என்று கெஞ்சுகிறுன். இரு சகோதரிகளினுலும் அவன் மனம் வெதும்பிப் போய் தத்தளிக்கின்றது! செய்வதறியாது திகைக்கின்றுன்.

தேவடியாள் வீட்டில் நுழைந்து அடிவாங்கித்தின்ற மதியீனக் கழுதைகளின் மற்ற செய்கையைக் கேட்கவேண்டுமோ! இத்தகைய மூளைகெட்ட முண்டங்கள் வாயை அடைத்தேனும் இருக்கின்றனவா! இல்லை. தான் முதல் பத்தி என்று வெட்கமின்றி வந்துவிடுகின்றன. ஐயோ! என்ன உலகம்! வெட்கம்! வெட்கம்!

15-வது அதிகாரம்

வேளையின் தன்மை வேண்டியதளிக்கும்

பல பேர்களின் முன்னிலையில் "நீ குற்றவாளி தான்" என்று தன்னை அழைத்துவந்து லாக்கப்பில் வைத்துப் பூட்டிவிட்ட சமயம் அயோக்கியப் பதராகிய—சண்டாளனுக்கும் கடையனாகிய—கிருஷ்ணசாமியின் மனத்தில் உலகத்தின் தன்மையும், மான அவமானத்தின் பேதா பேதமும் தெரிய வந்தது. அப்போது தான் இவ்வுலகில் பிறந்திருப்பதாகவும் அவமான மென்கிற உணர்ச்சியினால்—லஜ்ஜையினால்—தாக்கப் படுவதாயும் தோன்ற வாரம்பித்தது. தன்னுடைய தேகத்தைக் கால் முதல் தலை வரையில் உற்றுப் பார்த்தான். ஒன்றுமே தோன்றாது கதி கலங்கினான். ரங்கமணியின் தலையிலிருந்து வெள்ளம் வருவது போல ரத்தம் வந்த காட்சி கண் முன்பு போட்டி போட்டுக் கொண்டு தாண்டவமாடத் தலைப் பட்டது அவளுடைய பரிதாபகரமான முகமும், தன் பெண் தன்னைப் பற்றிக் கூறிய வார்த்தைகளும் அவளிடம் தாயின் அன்பு ஜ்வலித்ததும் ஊரார் தன்னைக் கேவலமாக இகழ்ந்து கூறியதும் ஆக ஒவ்வொன்றாக மனத்தில் அலைகளைப் போலப் புரளத் துவக்கியது. அவனுடைய பாலியம் முதல் இது பரியந்தம் நடந்த லீலைகள் முற்றும் ஒன்றன் பின் ஒன்றாக நினைவிற்கு வர வாரம்பித்ததும் அப்படியே மூர்ச்சையாகித் தன்னிலை யழிந்து விழுந்து விட்டான்.

வெளியாருடைய வார்த்தைகளைச் சிலர் சில சமயம் எடுத்துக்கொள்கிறார்கள்; சில சமயம் தள்ளிவிடுகிறார்கள். அந்தந்த சமயத்தின் நோக்கத்தையறிந்து பதில் பேசுவது வெகு கஷ்டம். எப்போதும் அதிகமாகப் பேசாதிருத்தலே நலம்.

ஆற்றுவாரும், தேற்றுவாரும் அற்றுக் கிடந்த க்ருஷ்ணசாமி வெகு நேரம் செல்லக் கண்ணைத் திறந்து பார்த்தான். தான் இப்போது கண் கலங்கித் தவிக்கும் நிலைமையில் தன்னருகில் ஒருவரும் இல்லாமையைக் கண்டான். தான் ஒரு பெருத்த கூட்டத்தினிடையில் அலகிலாத அட்டூழியத்தைச் செய்து அகமகிழ்ந்த காலத்தின் போக்கை நினைக்க அவைகளெல்லாம் அக்காலை இன்பமாகத் தோன்றினும் இப்போது பெரும் பாதகமாகத் தோன்றி வதைக்க வாரம்பித்தன....ஹா! சண்டாள சிநேகிதர்களே! உங்கள் சகவாசம் என்னை அடியோடு பாழாக்கிவிட்டதே! நானுகக் கெட்டுப் பாதி யழிந்தேன். நீங்களாக என்னைப் பாதி ஏன் முற்றிலும் அழித்து விட்டீர்கள்? ஐயோ! என்னை ஒருவர் அழித்ததாகவா நான் குறை கூறுகிறேன். சிச்சி! எனக்களித்த மதி எங்கே மறைந்தது....என்னறிவு எவ்வாறிருந்தது. என் மூளை எங்கே ஒளிந்தது....இதென்ன அநியாயம்! நான் எண்ணிலடங்காத பாபத்தை யன்றோ செய்து விட்டேன்.......ரங்கமணீ!........ஹா!....என் மனைவிமீதிலா மோட்டாரை ஏற்றினேன். மகா உத்தமியாகிய, சாந்த ஸ்வரூபியாகிய என் மனைவிமீதிலா மோட்டாரை ஏற்றிக் கொன்றேன்........ஐயோ!.... நான் இப்போது எங்கே இருக்கின்றேன்........வீட்டிலா!........ இல்லை....இல்லை. நடுக் காட்டிலா! இல்லை....கொலை, களவு, சூது, மோசம் முதலியன செய்தவர்களிருக்கும் சிறைச் சாலையிலா நான் இருக்கிறேன். என்ன! என்ன! சிறைச்சாலையா! ஐயோ! நான் பிறந்த கண்ணிய மென்ன! என் குலத்தின் மேன்மை என்ன! என் பெற்றோரின் மதிப்பென்ன? நான் உத்யோகம் பார்க்கும் உயர்வு என்ன, என் ரங்கமணியின் கௌரவ மென்ன! சிச்சி! என் ஒருவனால் எல்லாம் அழிந்துவிட்டதா! அழிந்தா போயிற்று. ஐயோ! நாசம் நாசம்! எல்லாம் நாசம். அடடா! நான் கொலையாளியாகவா சிறைச்

அந்தோ! மறதி என்பது வைத்த பண்டத்தில் என்பார்கள். விவாக வீட்டு தட்புடலில் என்பார்கள். உயிரும் உடலுமாகச் சிநேகம் செய்து விட்டா மறப்பது. சிநேகத்திலா மறப்பதை உபயோகிப்பது. சிச்சி! என்ன இருதயம்! என்ன அன்பு! எல்லாம் வேஷம்; காட்டிய நேசமெல்லாம் காரணார்த்தமே! காட்டிய அன்பெல்லாம் போலி அன்பே! இத்தகையவர்களா உண்மை சிநேகிதர்கள்?

சாலையில் வந்தேன்! குற்றவாளியாகவா பிடிக்கப்பட்டு ஜெயிலுக்கு வந்தேன்! என்ன இது! நானா என் மனைவியைக் கொலை செய்தேன். பன்முறை என் காலைப் பிடித்துக்கொண்டு—என் கரத்தைப் பிடித்துக்கொண்டு—வேண்டித் தொழுது புலம்பிய மனைவியை இக் கரத்தினாலும், இக் காலினாலுமா மோட்டாரை ஓட்டிக் கொன்றேன். ரங்கமணியா இறந்தாள்! ஹா! ஏ பாழுங் கொலையே! என்னைத் தொடர்ந்து வர எத்தனை நாள் எண்ணினாய்! ஐயோ! இச் செய்தி வெளியாருக்குத் தெரிந்தால் என்னை என்ன நினைப்பார்கள்? எவ்வாறு மதிப்பார்கள்? எவ்விதம் பேசுவார்கள்? எங்ஙனம் தூற்றுவார்கள்? எப்படி நிந்திப்பார்கள்.......நினைத்தால் நடுங்குகின்றதே! என் கதி இவ்விதமாகும் என்று நான் கனவிலும் கருதவில்லையே! ஏற்கனவே என்மீதிருந்த வெறுப்பெல்லாம் இன்று ஸ்தாபனமாகி விட்டதே! எனக்குற்ற இவ் வனியாயக் காலத்தினின்று இனி நான் மீள வழியுண்டா! இல்லை; இல்லை! ரங்கமணியின் இருதயம் துடித்த துடிப்பெல்லாம் நான் அனுபவித்தறிந்தாலன்றி என் பாபம் தீருமா! அவள் பொன்னுரையைக் கேளாது—மதியாது— திரிந்ததன் பலனைக் கண்டேன். ஐயோ! இப் பாழும் ஜென்மமெடுத்து நான் எத்தனை வேசிகளின் காலால் உதைப்பட்டேன்? எத்தனை கற்பாசிகளைக் கெடுத்து அடிபட்டேன்! எத்தனை திருட்டுத்தனமான செய்கைகளினால் எத்தனை மனிதரிடம் குத்து வாங்கினேன். மனைவியால் சொல்லப்பட்டதைக் கேளாது கேவலம் வேசி, விபசாரி. முதலியவர்களிடமெல்லாம் அடி வாங்கியுண்டேன்! ஹா! வெட்கக்கேடே! இவை எல்லாம் அக்காலை வெகு சந்தோஷமாயும் சகஜமாயுமன்றோ தோன்றின. மகா உத்தமிகளாகிய ரங்கமணியும், ஸாரநாயகியும் தடுத்ததைக் கவனித்தேனா!

நிதானமாக நடந்தால் குறித்த இடத்திற்குச் சிரமமின்றிச் செல்லலாம். முதலிலேயே தடபுடலாக ஓட்டமெடுத்தால் சிறிது தூரம் செல்வதற்குள் கால் வில விலத்துப் பெரு மூச்சு உண்டாகி ஓட்டம் தடைபட்டு நிற்க நேரிடுவது போல, ஆரம்பத்திலேயே அதி குதியலாக அன்பைக் காட்டிப் பார்ப்பவர்களுக்குப் பகட்டாக இரவு பகல் பிரியாது சினேகம் செய்தவர்கள் முடிவு ஓடியவர்களின் கதி போலாய்ப் பிறகு கண்ணில் காணவும் கிடைக்கக் கூடாத நிலைமைக்கு வந்துவிடுகிறது. வேகம் செய்யும் வேலை இதுதான்.

மனைவி என்று மதியாது மடியச் செய்த மாபாவி நான் என்ற பெயர் வாங்க விருக்கையில் எனக்குப் புத்தி எவ்விதம் வரும்? ஐயோ! லாரநாயகி! லாரநாயகி! கேவலம் கெட்டழிந்த பாவியாகிய என் வயிற்றில் பிறந்த நீ— சிறுமியிலும் சிறுமியாகிய நீ—என்னை நோக்கி ஒரு காலத்தில் "அப்பா! வேண்டாம்; அனியாயமாக அழிந்து போகவேண்டாம். அம்மாவின் கண்ணீர் அத்தனை சொட்டும்! அத்தனை ஈட்டியாக உங்களைக் குத்தும். அவ் விட்டிகளைத் தாங்க உங்கள் திறமன்று. என் தாயின் மகிமையை நீங்களறிய மாட்டீர்கள். அவள் வயிறெரியச் செய்வது போதாமல் அடித்தும் கொன்று விடுகிறீர்கள். அம்மா என்றைக்காவது உங்கள் கையினால் தான் இறக்கப் போகிறாள். உங்கள் மூலர்தான் அம்மாவுக்கு சாவு இருக்கிறது. நீங்கள் அம்மாவுக்கு எமன் என்பதை நீங்களே பின்பொரு காலத்தில் அறிவீர்கள். நான் குழந்தையாக இருப்பினும் உங்கள் தீச் செயலை அறியாமலிருக்கவில்லை. என் தாயைக் கொலை செய்த பிறகு எங்களையும் செய்துவிடும். பரதேசிகளாக நாங்கள் தவிக்கமாட்டோம், இப் புவியில் நீங்கள் ஜெனித்தது கொலை செய்வதற்குத்தானா! நீங்கள் அடித்த அடியால் அம்மாளுக்கு மயக்கம் வந்துவிட்டதே! இனி தெளிவதற்குள் உங்கள் கை வரிசையைக் காட்டினால் அம்மாள் இன்றே இறந்துவிடுவாள். போம் வெளியில். இங்கு நிற்கவும் யோக்யதை உமக்கில்லை. நீரா எங்களைக் காக்கக் கூடிய தகப்பன். நீங்களா குடும்பத்தை ரக்ஷிக்கக் கூடியவர்கள். சேச்சே! வெட்கங் கெட்டுப் பிழைக்கிறீர்கள்!" என்று வெகு தைரியமாகக் கூறினாளே! அந்த மொழியின்படியே ஆய்விட்டதே! என்னை வேண்டுமென்று சாபமிட்டவாறு பலித்துவிட்டதே! ஆகா! லார நாயகி! உன் அன்னையைக் கொலை செய்தேன். உன்னை கட்டாற்றில் விட்டேன். இன்னும் மற்றக் குழந்தைகளை எல்லாம் சந்தியில் தவிக்கச் செய்தேன். மனைவியைக் கொன்ற மகா பாவி

சில வீட்டில் இரவு தங்குவதற்கு மனம் பிடிப்பதே இல்லை. அதை ஜாடையாலறியாது வற்புறுத்தினால் ஏதோ தக்க காரணம் கூறி விலக நேரிடுகின்றது. உண்மையைக் கூறவும் சாத்யமன்று. அதைக் கேட்பதும் நீதி யன்று. அவர்கள் மனந்தான் அதை அறியும்.

என்கிற பெயரெடுத்துத் தூக்கு மரத்திலும் ஏறி மாளப் போகின்றேன். ஹா....இன்று உதயமான உடனே இச் செய்தி தந்தி மூலம் ஊரெங்கும் பரவிவிடாதா! என் பவிஷு இதுதான் என்று தெரிந்த எல்லோரும் காரியுமிழக் கண் முன் வருவார்களோ! ஐயோ! அக்ரமக்காரப் பாவியா நான்........ஆம்...நான் கொலைகாரன்தான்; எத்தனை கருக்களைக் கொலை செய்தேன். எத்தனை அமங்கலிகளை........சீச்சீ நினைக்கின் நடுங்குகின்றதே!..........இது தானா நான் எடுத்த ஜன்மத்தின் முடிவு! என்ன உலகம்! என்ன மனிதவாழ்க்கை! என்ன அலகைப் புத்தி.....ஹா! ரங்கமணியைக் கொன்றேன்; கொன்றேன். வேசிக் கள்ளன், குடிகாரன் என்கிற பெயரை நிலை நாட்டினேன். ....என்று தனக்குள் பலவாறு இன்னதென்று கூற வியலாத வெட்கம், துக்கம், அவமானம் முதலிய உணர்ச்சிகளினால் தாக்கப்பட்டு விழுந்து புலம்புகின்றான். மூளையே கலங்கிவிடும் போலாய்விட்டது. கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டுவிட்டது. இனிமேல் நான் இவ்வுலகிலிருப்பதற்கும் யோக்யதை இல்லை. எவ்விதமும் தூக்கு மரத்தில் சாதல் நிச்சயம். அத்தகைய அவமானத்தோடு பகிரங்கமாய் இறப்பதற்குள் கழுத்திற்கு உச்சுளுக்கு போட்டுக்கொண்டு உயிரை விட்டு விடுவோம். உதயமோ ஆய்விட்டது. இதற்குள் எங்கிருந்தாவது ஜனங்கள் வந்து விடுவார்கள். ஆகையினால் நாம் செய்த அக்ரமத்திற்கு தற்கொலைதான் மருந்து; அது தான் சரியான சிக்ஷை. ...வ கிராதக எண்ணங்களே! என்னைப் படுகுழியில் தள்ளிய பரம சண்டாள காமமே! ஹா! காமமே! காமமே! உன்னாலேயே நான் அழிந்தேன், அழிந்தேன்; அழிந்தேன். நெறியுடன் வாழ்ந்த என்னை நெறி பிறழச் செய்த சத்ரு நீ யல்லவா! காமத்தின் கேட்டைப் பற்றி சுகந்த புஷ்பம் என்கிற புத்தகத்தில் இருந்த பாடலின் கருத்து இப்போதல்லவா எனக்குப் புலப்படுகின்றது.

உடம்பு இளைத்து மலிந்து விடுகிற தென்றால் அதற்குச்சரியான காரணத்தை அறிந்தும் அறியாத மூடர்களாகச் சிலர் பேசுகின்றார்கள். மனத்தில் உற்சாகமற்று உபத்திரவம் உண்டாய்விடின் எவ்விதம் தேகம் புஷ்டியடையும்.

காமமே கோடிய நாகம் காமமே கோடிய காலன்
காமமே காட்டுத் தீயாம் காமமே கானின் வெள்ளம்
காமமே நரகம் போல்லாக் காமமே புயற்காற் றாகும்
காமமே கழுத்துச் சூரி காமமே உயிரின் ஹானி
காமமே குணத்தைப் போக்கும் காமமே பணத்தை நீக்கும்
காமமே தன மழிக்கும் காமமே புகழ் சிதைக்கும்
காமமே குடி கேடுக்கும் காமமே மிடி பயக்கும்
காமமே ஆயுள் போக்கும் காமமே அனைத்தும் போக்கும்
காமமே பிணிக்கு வித்தாம் காமமே பாபக் குன்றும்
காமமே எழி லகற்றும் காமமே பழியுண் டாக்கும்
காமமே சீச்சீ என்று கண்டவர் நகைக்கச் செய்யும்
காமமே கொண்டழிந்தோர் கதைகளை மறந்தீர் போலும்.

என்னை அடியோடு மடித்த காமமே! நீ என்னை செய்தது போல இனி வேறு சத்ருக்களையும் செய்யாதே! என் ஒருவனோடு நீ மறைந்துபோ! என்னை முதலில் பெரும் பிசாசாகிய நீ பிடித்த தனாலேயே மற்ற பூதங்களெல்லாம் என்னைப் பிடித்துக்கொண்டன. உங்கள் எல்லோரினாலும் நான் அனியாயமாய் மாளப் போகிறேன். ஏ காமமே! காமமே! சாராயக் குடியே! உயர்தர வொயினே! பூதங்களே! பிசாசுகளே! பிரம ராக்ஷஸிகளே! ஹா! என் பிழைப்பை நானே நினைத்தால் வெட்கமாயிருக்கிறதே! வெறுப்பாக இருக்கின்றதே! சீற்றமுண்டாகின்றதே! அங்ஙன மிருக்க என்னைப் பிறர் கண்டு பரிகஸிக்காமலிருக்கவே முடியாது. என் குற்றத்திற்கு மன்னிக்கவும் முடியாது” என்று கூறிக்கொண்டே தன்னுடைய உடையை அவிழ்த்து அதை நன்றாக முறுக்கி ஒரு முன்தாணியை ஜெயில் கதவில் கட்டி விட்டு மற்றொரு முந்தாணியை எடுத்துத் தன் கழுத்தில் கட்டிக் கொண்டு “ஹா! ரங்கமணி! ரங்கமணி! உன்னை நான் செய்த கொடுமைகளை மன்னிப்பாய்! உன் முன்னிலையில் நான் என் தப்பிதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் நேரமில்லாத

சிலருடைய செய்கையைக் காண ஆத்திர மில்லாதவர்களுக்கும் ஆத்திரம் உண்டாகிவிடுகின்றது; அதனால் பேச்சு வளருகிறது. மனஸ்தாபம், சண்டை சச்சரவு. இன்னும் எத்தனையோ வேடிக்கைகள்-

பாவியாகிவிட்டேன். உன் முன்னிலையில் நிற்பதற்கும் நான் யோக்யதை யற்றவன் என்பதை மறுக்க முடியாது. அதனாலேயே கடவுள் என்னைப் பிரித்து விட்டார் ஸாரநாயகி! சிறுமியாகிய உன் புத்திமை ஏற்றிருப்பின் நான் இக் கதியை அடைந்திருக்கமாட்டேன். என் வாழ் நாள் முடிந்தது. இனி என்போல பாதகன் புவியிலிருக்கமாட்டான். என்னுடைய பிறவியில் சகலமான பாக்கியமும் எனக்குக் கிடைத் திருந்தும் நான் பெரும் பாவியாகி ஒன்றையும் வகையாய் அனுபவித் தானந்திக்காத சண்டாளனாகி அற்பாயிசாய்த் தற்கொலை புரிந்து கொள்கிறேன். இனி தாமதித்தால் ஜெயில் சேவகன் விழித்துக் கொள்வான். இனி கழுத்தை இறுக்க வேண்டியது தான்.... ஹா! கடவுளே! இதுவோ என் முடிவு! இதுவோ என் விதி! என்னை மன்னிக்கும்படி வேண்டுதற்கு நான் அருகனல்லேன். பெரும் பாதகத்தைச் செய்த சண்டாளனுடைய முடிவை அறிந்தேன்........தீர்ந்தது....ஏ துஷ்ட நேசர்களே!.... உங்கள் கதியும் இப்படித்தானாகும். இனிமேல் இவ்வித அனியாயத் துறையில் இறங்காதீர்கள். என்னையே நீங்கள் நிதர்சனமாகக் காணலாம். என்னுடன் தீய பழக்கத்தையும் போட்டுப் பொசுக்கி விட்டு உலகம் போற்றும் உத்தமன், சத்ய சீலன், ;சாந்தஸ்வரூபன், ஏழைப் பங்காளனாகிய காந்தி யடிகளை வணங்கி, தேசத் தொண்டாற்றி வீர சொர்க்கம் புகுந்து வாழுங்கள்" என்று கூறிவிட்டுச் சுருக்கை இழுத்து விட்டான்.

அச்சமயம் காவல் புரிந்த சேவகன் எழுந்து காலைக் கடன் முடிக்க வெளியில் சென்றிருந்தான். அவ்விடத்தில் யாருமில்லை. சுருக்கு நன்றாக மென்னியை அழுத்துகிறது. அந்த ஸமயம் கிருஷ்ணஸாமி தான் செய்த பாபத்தை எல்லாம் எண்ணி—மனைவியைச் செய்த கொடுமைகளை எல்லாம் நினைத்து வருந்துகிறான். பிராணன் போகும் சமயம் பாதை தாங்காது தத்தளிக்கின்றது.

உபகாரம் செய்யவேண்டுமென்று நாம் நினைத்துப் பணம் கொடுத்துக் கொண்டே இருப்பினும் சிலருக்கு அது நன்றியே இருப்பதில்லை, பின்னும் பின்னும் பணம் கேட்கிறார்கள். கொடுத்த பணத்தைப் பற்றிப் பேச்சே இல்லை.

மென்னியை இறுக்க இறுக்க அவன் அஞ்ஞானம் முற்றும் நீங்கி ஞானம் பிறந்து விட்டது. ஐயோ! இருந்த நாள் வரையில் நாம் செய்த புண்ணியம் ஒன்று உண்டா! இல்லை. இல்லை. எல்லாம் பாபம். ....ஹா! நாம் கர்மத்தையே செய்து உயிரை மாய்த்துக் கொண்டால் அதனால் பலன் யாது? அலகையாய்ப் பிறந்து அலைந்து தவிக்கப் போகிறோம். அதைவிட உயிரோடு இருந்தால் நான் அநியாயம் செய்தது போல எத்தனை மக்கள் செய்கிறார்களோ அவர்களைத் தடுத்து என் நிலையை—கதியை—எடுத்துக் கூறி தேசத்திற்காவது, தொண்டு செய்து சொல்ப புண்யமாவது செய்யலாகுமே! ஹா! என் ஆத்திரப்பட்டு மடிய வேண்டும். நான் செய்த அநியாயத்திற்கு என்னைப் பிறர் பரிகசித்தால் என்ன. வைதால் என்ன. நான் குற்றவாளி என்பதை மறுக்க முடியுமா! சீச்சி! வீணே சாவதை விடுத்து மகாத்மாவின் சரண கமலங்களில் சென்று விழுந்து என் குற்றத்தை யொப்புக் கொண்டு எனக்கு அவர் என்ன தண்டனை விதிக்கிறாரோ அதன்படியே நடப்போம். அவர் பாதத்திலேயே இனி பிராணனை விடுவது. இது சத்யம்." என்று தீர்மானித்தபடி சுருக்கை யவிழ்த்து விட்டான். சுருக்கு எறிய அதிர்ச்சியினால் களைத்துப் போய் படுத்து பலவிதமான யோசனையிலாழ்ந்தான்.

இது இங்ஙனமிருக்க, ரங்கமணிக்கு மயக்கம் தெளியுமா என்று எதிர் பார்த்திருக்கையில் சற்று கண்ணைத் திறந்தாள். ஸாரநாயகி! மாமா வந்தாரா! மாமா எங்கே! தந்தி யடித்தாயா! ஐயோ! வலி தாங்க முடியவில்லையே! ஸாரநாயகி! அப்பா எங்கே! அவரைக் கைதியாக்கி விட்டார்களா!..எங்கே இருக்கிறார்....அண்ணா! அண்ணா! ஸாவித்திரீ—ஸாவித்திரீ!" என்றாள்.

மதன:—அம்மா! ரங்கமணி! இதோ இருக்கிறேன். விசனப் படாதே! அந்த பாதகன் உன்னைக் கொலை செய்து விடவே நினைத் தான்; அப்படியே செய்தும் விட்டான். அவனைப் பற்றிக் கூடவா

வக்கீல்களுக்கு நிறைய பணம் சேருவதற்காகவே சில அம்பக் கேஸுகள் நடக்கின்றன. இந்த அழகான கேஸுக்கு ஈரங்கியோ கணக்கில்லை. கடைசியில் வருடக் கணக்காகி முடியும்போது குற்றம் செய்த பாதகனையே குற்றவாளி யல்லவென்று அநியாயத் தீர்ப்பு கூறிவிடுகிறார்கள். என்ன நீதித் தனமோ!

நிக்க வேண்டும். சண்டாளன் கைதியாகி சிறைச் சாலையில் இருக்கிறான். உனக்கு உடம்பு என்ன செய்கிறது?—என்றான்.

ஸாரநாயகி:—அம்மா! இந்த சமயமா நீ கவலைப் படுவது. உன்னைக் கொலை செய்த கொடிய பாதகனைப் பற்றி நீ கேட்க வேண்டுமா! அவனை என் தந்தை என்று சொல்வதற்கும் வருத்தமாயிருக்கிறது அவன் இனி எக்கேடு கெட்டாலென்ன. அவனைப் பற்றி பேசாதே! அம்மா! மாமா வந்தார். சகல விஷயத்தையும் தெரிவித்தேன். வருந்தாதே!

ரங்கமணி:—அண்ணா! குழந்தைகளைச் சந்நிதியில் விட்டேன். காப்பாற்று; கை விடாதே. அண்ணா! என்னால் நீ அடைந்ததெல்லாம் துன்பம். என் பொருட்டு நீ பட்ட கஷ்டம் போதாதென்று கடைசியில் என் குழந்தைகளையும் உன் காலில் கட்டுகிறேன். அண்ணா! எனக்கு இச்சமயம் ஒரு உதவி செய்யவேண்டும். என் மீது கோபிக்காதேயுங்கள். என் பர்த்தா எத்தகைய துன்மார்க்கராகவிருந்த போதிலும் அவரைக் காட்டிக் கொடுப்பது ஒரு மனைவிக்குக் கடமையல்ல. ஆகையினால் இந்த விபத்திற்குக் காரணம் நான் தான். அவரல்ல வென்பதை விளக்க வேண்டும். அம்மா, நர்ஸ்! உன்னுடைய தயவை நான் இப்போது எதிர்பார்க்கிறேன். உன்னைப் பார்த்தால் இந்திய மாதாகக் காணப்படுகிறாய். இந்தியரின் பழக்க வழக்கம் உனக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் நான் சொல்கிறபடியே நீ வாக்குமூலம் எழுதிக் கொள்ள வேண்டும். என் பர்த்தா ஜாக்ரதையாக தான் ஹாரன் செய்துகொண்டே வண்டியை ஓட்டினார். நான் தான் தடுக்கி விழுந்து விட்டதால் அகஸ்மாத்தாக அகப்பட்டுக் கொண்டேன் என்று நான் வாக்குமூலம் கொடுக்கிறேன். அதை எழுதிக் கொள். உனக்குப் புண்ணியமுண்டு. இத்தனை அவ

வினா—ஏனம்மா! உனது சினேகிதை உன் வீட்டிற்கு முன்பு அதிகுதியலாக வந்துகொண்டிருந்தாளே! இப்போது ஏன் வருவதில்லை?

விடை—அம்மா! உலகத்தில் நிலைத்திருப்பது ஏதேனும் உண்டா! அது போல அவளுடைய காரியம் முடிந்துவிட்டது வருவதும்; நின்றுவிட்டது. மனிதர்களும் மறந்துபோய்விட்டது. இப்போது வேற்று மனுஷியாக மாறியும் போய்விட்டாள். இதென்ன உலகத்தில் சஜந்தானே.

மானத்துடன் என் பர்த்தாவுக்குப் புத்தி வந்திருக்குமென்று நினைக்கிறேன். மகாத்மா காந்தி என்ன சொல்கிறார்? "நமக்குப் பிறர் தீங்கு செய்தாலும் நாம் அவர்களுக்குத் தீங்கு செய்யலாகாது," என்கிறார். அவர் கூறுவதுபோல எனது கடமையை நான் பத்தினி என்கிற ஹோதாவிலும், அஹிம்சையைக் கைக் கொண்டும் நான் இத்தருணம் அவரைக் காக்க வேண்டும். எனக்கு நீங்கள் கட்டாயம் உதவி புரிய வேண்டும். அவருக்கு நல்ல மதியை உண்டாக்கும் பொருட்டே கடவுள் இவ்விதம் செய்திருப்பார் என்று நான் நினைக்கிறேன். எனக்குப் பேச முடியவில்லை. வலி அதிகரிக்கின்றது. அண்ணா! ஸாரநாயகி! மறுக்க வேண்டாம். நான் இறக்குந் தறுவாயில் வேண்டுவதைப் பூர்த்தி செய்யுங்கள்" என்று வேண்டினாள்.

இவளுடைய பதி பக்தியையும், காருண்ய சிந்தையையும் நோக்கிய நர்ஸின் மனது இளகியது. மதனகோபாலன், ஸாவித்திரி இருவரும் தடை பேசக் கூடாது கட்டுப்பட்டு விட்டார்கள். பிறகு ரங்கமணியின் இஷ்டப்படி வாக்குமூலம் வாங்கப்பட்டது. உடனே "அவர் மீது குற்றமில்லை என்று நிரூபித்து அவரை விடுதலை யடையும்படியாகச் செய்யுங்கள். எழுந்திருங்கள். அவரை என் முன்னால் கொண்டுவாருங்கள். நான் பார்க்க வேண்டும். அவர் மதி திருந்தியதா அறியவேண்டும். என்னிலைமை எச்சமயம் எவ்வாறாகுமோ?" என்று வற்புறுத்தினாள். உடனே மதனகோபாலன் வேறு நர்ஸை அவ்விடமமர்த்திவிட்டு அந்த நர்ஸுடன் வாக்கு மூலத்தை எடுத்துக் கொண்டு போலீஸ் அதிகாரியைக் கண்டு வாக்கு மூலத்தைக் காட்டினான்.

வாக்கு மூலத்தைக் கண்ட அதிகாரிகள் கமிஷனர் "விசாரணையில் அவர் கூறும் தீர்ப்பே சரியானது; அவ்வாறு தான் நடக்கவேண்டும்" என்று தெரிவித்துப் பின் ஜெயிலுக்கு மதனகோபாலனின் விருப்பப்படி அவனை அழைத்துச் சென்றார்கள். அப்போது கிருஷ்ணசாமி களைப்பு நீங்கி விசனகரமான முகத்தோடு அழுதவண்ணம்

வினா—உலகத்தில் அதிகமாக நடைபெறுவது எது.

விடை—சிநேகம் செய்வதும் பிறகு பிரிவதும் தான்.

உட்கார்ந்திருந்தான்; மதனகோபாலனைக் கண்டதும் மிகுந்த வெட்கமும் துக்கமும் அடைந்து சிறு குழந்தையைப் போல விம்மி விம்மி அழ வாரம்பித்தான். "ஆ! மதனகோபாலா! ஐயோ! என் கதியைப் பார்த்தாயா! என்விதியைப் பார்த்தாயா!" என்று ஏதேதோ சொல்லிப் புலம்ப வாரம்பித்தபோது மதனகோபலன் தடுத்து "மாமா! வருந்தவேண்டாம். விதியை வெல்ல ஒருவராலும் மாகாது. நாம் பிறகு பேசிக்கொள்வோம். இப்போது மாஜிஸ்டிரேட் வீட்டிற்கு நேரில் சென்று உம்முடைய குற்றத்தை நீக்கி விடுதலை படையச் செய்யவேண்டும். ரங்கமணியின் வாக்குமூலம் ஆஸ்பத்திரியில் வாங்கியாயிற்று நான் ஜாமீனில் விடுவிக்கத் தயாராக விருக்கிறேன்; போலீஸ் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்" என்று வார்த்தையை அமுக்கிவிட்டான்.

உடனே போலீஸ் அதிகாரிகள் உள்பட எல்லோரும் மாஜிஸ்டிரேட்டினிடம் சென்று சட்டப்படிக்கு உள்ள நியாயங்களைக் கூறி இந்த விபத்து எதிர்பாராது நேர்ந்த தென்றும் இவன்மீது குற்ற மில்லை என்றும் ரங்கமணியின் வாக்கு மூலத்தைக் கொண்டு தீர்ப்பு செய்து இவனை விடுதலை செய்ததுடன் ஓட்டும் போது குடி வெறியிலிருந்ததற்காகச் சிறிது பணம் அபராதம் விதித்தார்கள். இந்த மாதிரியாக நடக்குமென்று கனவிலும் கருதாத கிருஷ்ணசாமி ரங்கமணியின் மேன்மையான குணத்தையும் தன்னிடம் காட்டிய தயவையும் கண்டு அபாரமான மனமகிழ்ச்சி கொண்டு உள்ளம் பூரித்தான். தன் குற்றத்தை அடியோடு அமுக்கிவிட்டதை எண்ணி உள்ளம் களித்தவாறு ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

அப்போது தான் ஆஸ்பத்திரி டாக்டர் வந்து ரங்கமணியைப் பார்த்துவிட்டு "அம்மா! இனிமேல் ஒருகால் தப்பித்துக்கொள்ளலாம்

பரிசுப் போட்டிகளில், இதற்குமுன் பரிசு பெற்றவர்களை மறுபடியும் அனுமதிப்பது உசிதமன்று. ஒரு சிலரே ஒவ்வொரு தடவையும் பரிசுகளைப் பெற்றுக்கொள்வதால் யோக்கியதையுடைய மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படாது போய்விடுகின்றது. சில சமயங்களில் அவர்கள் புதிதாக வந்தவர்களால் தோல்வி யடைந்தால் அவமான முற நேருகின்றது.

என்று தோன்றுகின்றது; பயமில்லை. கடவுளிருக்கிறார். குழந்தாய். பயப்படாதே! ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள்" என்று ஸாரநாயகியுடன் சொல்லிவிட்டுச் சென்றார். இதைக் கேட்ட ஸாரநாயகி உள்ளம் பூரித்தாள். மற்றைய குழந்தைகளும் விசன மொழித்தார்கள். பகல் ஒரு மணியாய் விட்டது. அவ்வளவு நேரம் எல்லா விவகாரங்களையும் முடித்துக்கொண்டு மதனகோபாலனும் க்ருஷ்ணசாமியும் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்கள். அதே சமயம் திலோத்தமாவின் புருஷன் ராமமூர்த்தியும் வந்து சேர்ந்தான். துரைராஜா ஸாவித்திரியைப் பார்க்கச் சென்றான். ரங்கமணிக்கு நினைவு வந்தபிறகு அது மாறவே இல்லை. அதுவே அவளுடைய தேக குணத்தை எடுத்துக் காட்டியது. கிருஷ்ணஸாமி ரங்கமணியின் அருகில் வந்து அவளிரு கரத்தையும் பற்றிக்கொண்டு வாய் திறந்து பேசும் வகை பற்றுக் கோவெனக் கதறினான்.

இதற்குள் மதனகோபாலன் அங்கு வந்த ராமமூர்த்தியை விசாரித்துபசரித்தான். ரங்கமணி தன் பர்த்தாவை நோக்கி "நாதா! அழுவதும், வாயில் வந்தவாறு பேசுவதும் ஓர் பெரியதல்ல. நீங்கள் இப்போது என்ன பேசப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். எல்லாம் வைராக்யப் பேச்சாயு மிருக்கலாம். ச்மசான வைராக்யம், புராண வைராக்யம், ப்ரஸவதி வைராக்யம் என்று மூன்று வகை வைராக்யத்தில் இதுவும் ஒன்றாக விருக்கலாம். நீங்கள் வீணாக வார்த்தையை வளர்த்தாது "பழைய மாதிரியை அறவே மறந்துவிட்டேன். இனி அவர்கள் நேசம் செய்வதில்லை" என்பதை நமது குலதேவதையின் மீது ஆணையாக இத்தனை ஜனங்களின் முன்னிலையில் சத்தியம் செய்து கொடுக்கவேண்டும், அந்த உறுதி எனக்குப் போதும். அதைத் தான் நான் எதிர்பார்க்கிறேன். நாதா! இனியாவது உங்கள் மக்கள், உங்கள் மனைவி, உங்கள் குடும்பம் அதைக் காப்பது உங்கள் கடமை என்பதை சிரத்தையாக வகித்தால் அதுவே எனக்குப் போதும். நான் இனி சாகமாட்டேன்;

சிலர் பாடும் போது, தங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர் பக்கத்திலிருந்து நேர் முகமாகவோ, மறை முகமாகவோ உற்சாகப் படுத்தினால்தான் நன்றாகப் பாட முடிகின்றது. அப்படி யில்லாவிடில்......

பிழைத்துக்கொள்வேன் என்றும் வைத்தியர் கூறிவிட்டார். ஆகை யினால் இனிமேல் புத்துயிர் பெற்ற தம்பதிகளாக வாழ்வோம். இந்த உறுதி யளியுங்கள்" என்று பரிதாபகரமாகக் கூறினாள்.

இது கேட்டுப் பின்னும் விசனமடைந்த கிருஷ்ணசாமி "என் ரங்கமணீ! நமது குல தேவதையின் மீது ஆணையாக, உலகம் போற் றும் உத்தமரான காந்தி யடிகளின்மீது ஆணையாக நான் புதிய மனிதனானேன். இனி பழய பழக்கத்தை இன்றோடு சத்திய மாக விட்டேன். இது முக்காலும் சத்தியம். ஸாரநாயகி! சத்ய மாக நான் இனி நன்னடக்கையுடைய பிதாவாக நடக்கிறேன். நீ பொரு காலத்தில் சொல்லியதை நான் இன்று நினைத்துப் புலம்பி னேன். ரங்கமணீ! என்னை நம்பு. இத்தனை பேர்களின் முன்னிலையில் நான் சத்யம் செய்துவிட்டேன். நான் செய்த அட்டூழியங்களை எல்லாம்;நானறிந்தேன். அறிந்ததன் பயனாக இனி நாம் உலகில் உயிர் வாழலாகாதென்று உயிரை விடவும் நான் தயாராகிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டேன். உடனே என் மனமே என்னை வேறுவித மாகத் திருப்பிவிட்டது. அதனால் நான் மீண்டும் சுருக்கைக் கழற்றினேன். எனது ஜென்மமே நேற்றோடு புதிதாகி விட்டது. என்னறிவு என்னிடம் திரும்பப் பெற்றேன். சத்யமாய் நான் இனி மேல் பழய வழிகளை மறந்தேன்." என்று கூறிச் சத்யம் செய் தான். அங்கு புலம்பிக்கொண்டிருந்த மற்ற குழந்தைகளை எடுத்து அணைத்து முத்தமிட்டான். ஒரு பிதாவுக்கு உண்டாக வேண்டிய சகலமான பாசமும் வந்து விட்டது.

இதைக் கண்டு ரங்கமணியும் ஸாரநாயகியும் மிக்க சந்தோஷ மடைந்தார்கள். "ஓர் நல்லதைச் செய்வதற்குத் தான் இந்த விபத் தைக் கொணர்ந்து காட்டினார் கடவுள்" என்று எல்லோரும் மகிழ்ந் தார்கள். மதனகோபாலனுக்கு இங்குற்ற விசனம் நீங்கி எல்லாம்

வினா—ஐயா! தேசத் தொண்டரே? உங்கள் காந்தி உங்களைப் பிச்சை எடுக்கத்தான் சொல்லி இருக்கிறாரா!

விடை—உங்களைப் போன்ற சுய நலப்புலிகளாக இராமல் பிச்சை எடுத்தேனும் தன் தாய் நாட்டைக் காக்கும்படியாகக் கூறி இருக்கிறார்.

இன்பகரமாக முடிந்ததால் மெத்த மகிழ்ச்சி யடைந்தான்; எனினும் "ஸாவித்திரியின் நிலைமை எவ்வித மிருக்கிறதோ! தந்தி பொன்றும் வரவில்லையே! நாம் இங்கு விவரத்தைக் கூறிவிட்டு அங்கு சென்று விடுவோம். கடவுள் அனுக்கிரகத்தினால் இரு சகோதரிகளின் புருஷரும் நல்வழிப்பட்டார்கள். திலோத்தமாவின் புருஷனும் அதிர்ஷ்ட வசத்தினால் திரும்பி விட்டான். ஸாவித்திரியின் உயிர் மிஞ்சிவிட்டது. "ஸாரநாயகி சித்திக்கு எவ்வித மிருக்கிறதோ, ஒன்றும் தெரியவில்லை. இங்கு அம்மாவுக்கு அந்தச் செய்தியை இப்போது தெரிவித்தால் மனம் அதிர்ச்சி யுண்டாகும்; ஆகையினால் அதைத் தெரிவிக்க வேண்டாம். நான் சென்று அங்குள்ள நிலைமையைப் பற்றிக் கடிதம் போடுகிறேன். ஏதோ முன்னோர் செய்த தவப்பயனால் உன் தந்தையின் புத்தி மாறியது. அவர் இங்கு பார்த்துக் கொள்வார். நான் சென்று வருகிறேன். அம்மாவின் நிலைமையைப் பற்றியும் எழுது." என்று அவளிடம் கூறிவிட்டு, ரங்கமணியிடம் வந்து தனக்கு ஏதோ முக்கிய காரிய மிருப்பதாகவும் சென்று திரும்பி வருவதாயும் கூறி விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து ஸாவித்திரி இடத்திற்கு வந்தான்.

அவன் வரும்போது தான் ஸாவித்திரிக்குச் சற்று மயக்கம் தெளிந்தது. அவள் தன் பதியை நோக்கி "நாதா தாங்கள் செய்த சத்தியம் உறுதியானதா!;என் அண்ணா எங்கே! எங்கே சென்றார்." கள்ளுக்கடைக்காரக்கனவானை என்ன செய்தார்கள்? என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டாள். இதைக் கேட்டுக்கொண்டே சென்ற மதனகோபாலன் "அம்மா நான் எங்கேயும் போகவில்லையே! இதோ உன்னருகிலேயே இருக்கிறேன். கள்ளுக்கடைக்காரருக்கு அவர் செய்கைக்குத் தக்கவாறு மரியாதைகள் செய்து பரிசுகள் கொடுத்து கௌரவமான தனித்த இடத்தில் வைத்திருக்கிறார்கள். அம்மா! ஸாவித்ரீ! உனக்கு இப்போது உடம்பு எப்படி

வினா—வினையா உமக்குக் கோபம் மூக்கு வரையில் வருகிறது.

விடை—உங்களைப்போன்ற தேசாபிமான மற்ற கட்டைகளை—மிருகங்களைப்—பார்த்தால் வேறு என்ன ஐயா வரும்?

இருக்கிறது? சற்று குறைந்ததா! வலி எவ்விதமிருக்கிறது? மயக்கம் நன்றாகத் தெளிந்துவிட்டதா!" என்றான்.

ஸாவித்திரி:—அண்ணா! எனக்கி இப்போது ஒரு உடம்பும் இல்லை. என் பர்த்தாவின் மதி மாறி விட்டதே எனக்குப் பெரும் ஒளஷதமாயிற்று. அந்தப் புண்ணியவான் துப்பாக்கியால் சுட்டது என் கால் ஆட்டுச் சதையில் பட்டுவிட்டதால் சற்று பாதையாகிவிட்டது. அந்த குண்டு மார்பு முதலிய இடத்தில் பாய்ந்திருந்தால் நான் சவமாகி விருப்பேன். என்னுடைய கோரிக்கைப்படி கள்ளுக் கடைக்காரனை இனி கள்ளு விற்கவிடாமல் புத்தி கற்பித்துவிட்டால் போதும். எனக்கு அது தான் தேவை. நமது பாரத பூமியிலிருக்கும் கள்ளுக்கடைகளெல்லாம் ஒழியவேண்டும், ஏழை மக்களெல்லாம் குடிக்காது சுக முற்று வாழவேண்டும் இதுதான் என் மனப்பூர்வமான கோரிக்கை. எனக்கு ஜுரம் நன்றாக விட்டுப் போய் விட்டது. காலில் உள்ள ரணம் இன்னும் இரண்டு நாளில் குணமாகி விடும். நான் குணமுற்று எழுந்தவுடனே நமது சகோதரிகளாகிய திலோத்தமா, ஜெயலக்ஷ்மி இன்னும் மற்றவர்களாகிய எல்லோரையும், வேலூர் ஜெயிலில் சென்று பார்க்கவேண்டும் என்று வெகு வாய்ப் பேசி மகிழ்ந்தாள். நாகஸாமியும் சந்தோஷமாய்த் தன் மனைவியை விட்டு அப்புறம் இப்புறம் அகலாது உட்கார்ந்திருந்தான்.

* * * * *

ஸாவித்திரி பூர்ண குணமாகி வீடுவந்து சேர்ந்தாள். ரங்கமணிக் உடம்பு நன்றாகக் குணமானதும் ஸாரநாயகியினால் ஸாவித்திரியின் விஷய மறிந்துகொண்டு மனந்தாங்காத விசனத்துடன் ஸாவித்திரியின் வீட்டிற்குக் குடும்பத்துடன் ஓடி வந்தாள். சகோதரிகளிருவரும் தங்களுக்நேற்ற ஆபத்துக்களையும், கணவன்மார் நன்மதி பெற்ற சந்தோஷங்களையும், பிரிந்த நாளைய வர்த்தமானங்களை

வினா—காந்தி எதற்காகச் சீமைக்குச் சென்றிருக்கிறார் ஐயா!

விடை—உங்களைப் போன்ற உணர்ச்சியற்ற கட்டைகள் இந்தியாவில் இருக்கின்றன என்பதை அவர்களுக்குக் கூறி உங்களுக்கு உணர்ச்சி வாங்கிக் கொண்டு வரச் சென்றிருக்கிறார். இது தெரியாதா!

யும் பற்றி பேசிப் பேசி, இன்பமும் அன்பமும் சந்தோஷக் கண்ணீரும் ஒருங்கே பெற்று வெகு நேரம் கழித்தார்கள். அன்று ஓர் பெரும் விருந்து ஸாவித்திரியின் வீட்டில் நடந்தது. கிருஷ்ணசாமியும், நாகஸாமியும் தங்கள் காலவர்த்தமானத்தையும் முன்னர் கெட்டழிந்த வயிற்றெரிச்சலையும், பிறகு புத்தி வந்ததையும் பற்றிப் பேசி மகிழ்ந்தார்கள். மதனகோபாலனின் சந்தோஷத்திற்கு எல்லையுண்டா? கரை புரண்டது; எனினும் பானுவை நினைத்து ஏங்கித் தவிக்கும் தன்மை அவன் ஆயுளோடு தான் முடிவடையும்.

அன்று மாசி மகமாகையினல் திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் பார்த்தஸாரதி ஸ்வாமி சமுத்திரத்திற்கு எழுந்தருளி தீர்த்தம் சாதிக்கும் புண்ணியதினம். அளவற்ற ஜனத்திரள்கள் கும்பலாக சமுத்திரக் கரைக்குச் சென்று ஸ்வாமியின் வரவை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பெருத்த ஜனத்திரளின் ஆரவாரம் காண்போருக்கு வெகு இனிமையாக இருக்கின்றது. அந்த சமுத்திர ஸ்நானத்திற்கு நமது கதாநாயகர்களாகிய ஸாவித்திரி, அவள் புருஷன், ரங்கமணி, அவள் புருஷன், மதனகோபாலன், திலோத்தமாவின் புருஷன், துரைராஜா முதலியவர்கள் ஒரு கூட்டமாகக் கூடி இருந்தார்கள்.

மங்களகரமான மேள வாத்ய கோஷத்தினிடையே ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி கருடவாகனரூடராய் ,வேத பாராயண கோஷ்டிகள் உள்பட வெகு ஆனந்தகரமாக எழுந்தருளினர். கடற்கரையில் அமைந்துள்ள பந்தலில் ஸ்வாமி எழுந்தருளினர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேங்காய், பழம் முதலிய பிரஸாதங்களைக் கடவுளுக்குச் சமர்ப்பித்துத் தமது மனேபாவத்தின்படி வேண்டிக் கொள்கிறர்கள். அத்தகைய ஆரவாரம் நிறைந்த கடற்கரையில்

வினு—புருஷன் மனைவிக்கு மட்டும் ஏனையா இத்தனை பாசமும், பந்தமும் உண்டாகின்றது,

விடை—உம்மைப் போன்ற வேசிக் கள்ளனுக்கு இதைச் சொல்வதும், தேசாபிமானமற்றக் கற்களிடத்தில் தேச மகிமையை, காந்தியின் பெருமையைக் கூறுவதும் வீணேயாகும்.

அன்றைய காலைப் பத்திரிகையாகிய இந்த பத்திரிகையோடு காங்கிரஸ் தொண்டர்கள் ஜே ஜே கோஷத்துடன் பெருங் கூட்டமாக வந்து நின்று "நேற்றிரவு கலியுகத்தில் பேசுந் தெய்வமாகிய காந்தி யடிகளுக்கும் லார்டு இர்வின் பிரபு அவர்களுக்கும் ராஜி ஒப்பந்தமாகிவிட்டது. நமக்கோர் சந்தோஷ தினமாக இன்று கடவுளும் எழுந்தருளி சமுத்ர ஸ்நானமும் கிடைக்கின்றது. இதோ இத்தனை விதமான தீர்மானத்துடன் ஒப்பந்தம் முடிந்து காலைப் பத்திரிகையில் வந்துவிட்டது. மறியல் செய்வதற்கு நமக்கு முழு உரிமையும் உண்டு. உப்பு காய்ச்சலாம். சிறைக்கு அனுப்பப் பட்ட சகோதர சகோதரிகளை எல்லாம் விடுதலை செய்து விடுகிறார்களாம்; வந்தே மாதரம்! வந்தே மாதரம்! வந்தே மாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே! சிறை சென்ற தேசபக்தர்களுக்கு ஜே" என்று பெருத்த கரகோஷத்தினிடையே ஆரவாரம் செய்வதைக் கண்ட நமது ஸாவித்திரி, மதனகோபாலன் முதலிய எல்லோரும் அக் கூட்டத்தில் வந்து கலந்துகொண்டு விஷயத்தை யறிந்து தாங்கமாட்டாத சந்தோஷத்தினால் ஆனந்தக் கண்ணீர் விட்டுப் பெருத்த யோசனை செய்ய வாரம்பித்தார்கள். இந்தக் கூட்டத்தில் இன்னும் அநேக ஸ்திரீ ரத்தினங்களும் வந்து கலந்துகொண்டார்கள் மகாத்மா என்றும் ஜெயம் பெற்று தீர்க்காயுளுடன் வாழவேண்டுமாய்க் கடவுளைத் துதித்து வேண்டினார்கள். அன்றைய ராஜி தினத்தை ஓர் பெருங் கூட்டமாகக் கூடித் திருவிழா போன்று மாலையில் நடத்த அப்போதே தீர்மானித்தார்கள். அதற்காக உண்டியும் வசூல் செய்தார்கள். அந்த கடற் கரையின் ஆனந்த வைபவத்தை இந்த ஏட்டில் எழுதியா விளக்கும். பதினாயிரம் கண்கொண்டு பார்த்தாலும் களி தீராது. உண்மையில் அதை தேவலோகமோ! என்று தான் நினைத்தோம். இவை யாவும் அன்று உண்மையாகவே நடந்ததாகையினால் அப்படியே குறிப்பிட்டோம்.

அனாவசியமான செலவுக்கு எப்படியோ பணம் கிடைத்து விடுகிறது. தன் குழந்தைக்கு முக்கியமாய்க் கொடுக்கவேண்டும் சமயத்தில் அணாக்கணக்கில் கூடக் கொடுப்பதற்குத் தரித்திரம் வந்து சூழ்ந்து விடுகிறது.

கருட வாகனத்துடன் எழுந்தருளிய பார்த்தஸாரதிப் பெருமாள் தீர்த்தம் ஸாதித்தார். அச்சமயத்திலேயே பாகவத கோஷ்டிகளும், இன்னும் மற்ற பக்தர்களும் தம்பதி சகிதமாயும், தாயும் மகனுமாயும், சிநேகித கோஷ்டிகளாயும் பல்வேறு விதமான காட்சிகளுடன் புண்ணிய நீராடினார்கள். நமது கதா நாயகங்களும் கொங்குமுடி இட்டுக்கொண்டு வெகு உல்லாசமாக ஸ்நானம் செய்தார்கள். துரைராஜாவும் ராமமூர்த்தியும் தம் தம் மனைவி பக்கலில் இல்லையே என்று கவலையுற்றார்கள். கூறத் திறமற்ற ஆநந்தக் கடலில் அகமகிழ்ந்து நீராடும் மாந்தர்களின் வைபவத்தை நேரில் கண்டானந்திப்பவர்க்கே தெரியும் மகிமை. அலை மோதி யடிப்பதால் தடார் புடார் என்று ஒருவர் மீதொருவர் விழுவதையும், குழந்தைகள் நீராடுகையில் அலையில் முன்னும் பின்னும் இழுத்துச் செல்வதையும் கண்ட ஜனங்கள் கூக்குரல் இடுவதும், பெரிய வயது முதிர்ந்த தாதாக்கள், பாட்டிகள் தள்ளாடித் தடுமாறி விழுவதும் அதைக் கண்டவர்கள் நகைப்பதும், தம்பதிகள் ஆநந்தமாய் நகைத்துக் கொண்டே ஸ்நானம் செய்யும் காட்சியும், கரைமீது உட்கார்ந்திருக்கும் குழந்தைகளின் ஆரவாரமும், பணத்திற்காகப் புரோகிதம் செய்யும் மந்திரம் தெரியாத புரோகிதர்கள் பாட்டிமார்களுக்கும் பாமர ஜனங்களுக்கும் ஸங்கல்பம் செய்துவைக்கும் வேடிக்கையும், ஜலத்தில் போடும் பழம், வெற்றிலை, பாக்கு முதலியவற்றைப் பொறுக்குவதற்காக அலையில் வட்டமிடும் கரையாரப் பசங்களின் களியாட்டமும், "அடேய்! அவனே! இவனே! சப்பா! சேஷா! குழந்தை எங்கே! கோட்டான் எங்கே! துணி எங்கே? மணி எங்கே!" என்று விசாரிக்கும் விநோதமும், சந்தடி சாக்கில் வந்தது லாபம் என்று முடிச்ச அவிழ்க்க வரும் கேப்மாரிகளின் செய்கையும். அவர்களில் அகப்பட்டுக்கொண்டு உதை வாங்கும் சிலரின் மாய ஜாலமும், கடற்கரையில் ஆபத்து நேராது காப்பதற்காகப் பாரா கொடுக்கும்

"இன்று முக்கியமாகப் போகவேண்டிய இடத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டாமா?" என்று கேட்டால் அது சிலருக்குக் குற்றமாகப் படுகிறது. தன்னை அவமதித்துப் பேசியதாயும் நினைத்துவிடுகிறார்கள். சொந்த மனிதர்களே அப்படியானால் மற்றையோரைக்கேட்கவேண்டுமா?

போலீஸ் வீரர்களின் ஆர்ப்பாட்டமும், தண்ணீரில் மூழ்கிவிட்டவர்களைக் கரை சேர்க்கவும் காப்பதற்குமாக உலாவும் (Scouts) சாரணர்களின் கூட்டமும், இத்தனை வைபவங்களையும் புகைப் படமெடுக்கும் போட்டோக்ராபரும், இந்த ஆரவார வேடிக்கையைப் பார்பதற்காக வந்திருக்கும் சில துரைமகனும் துரைசானிகளும் பேசும் தமாஷும், "ஐயோ! மணியைக் காணவில்லையே! நகையைக் காணவில்லையே!" என்று வருந்துவோரின் பரிதாபமும், புதிதாக நகையைக் கிடைக்கப்பெற்றவர்களில் சிலர் அதை வெளியிடாது குசு குசு என்று அமுக்கிவிடுவதும், யோக்யமானவர்கள் பொருள் யாருடைய தென்று விசாரித்துக் கொடுப்பதும், தானங்கள் வழங்குவோர் வழங்குவதும், ஒரு தரம் தானம் வாங்கியவர்களே மறைந்து மறைந்து வந்து மூன்று தரம் வாங்கும் வேடிக்கையும், அப்பப்பா! ஒன்றிரண்டல்ல. இன்னும் இது போன்ற வேடிக்கை விநோதங்கள் எண்ணிறந்தவைகளை மாசி மகம், கிரகணம், அமாவாசை முதலிய புண்ணிய காலங்களில் கடற் கரையில் காணலாம்.

இத்தகைய கோலாகல வைபத்தைக் கண்டு ஆனந்தித்த நமது கூட்டத்தார் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு வீடு திரும்பினார்கள். அன்று காந்தி இர்வின் ராஜி தினத்தை ஓர் சுப தினமாக வீட்டில் விருந்துடன் கொண்டாடினார்கள். மாலையில் அநேக ஆயிரக்கணக்கான ஜனத்திரளுடன் பெருத்த ஊர்வலம் காந்தி படத்துடன் நடத்தி கடற்கரையில் பொதுக் கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்தில் அநேக தொண்டர்களும், ஸ்ரீமதிகளும் பேசினார்கள். நமது நாகஸாமி, துரைராஜா, ராமமூர்த்தி மூவரும் கூடப் பேசினார்கள். பிறகு ஸாவித்ரி பேசவாரம்பித்தாள்.

சிலருக்கு சுகோடு என்ற பதத்தைக் கேட்கும் போதே பயமாக விருக்கிறது. ஆனால் சில பிணந் தூக்கிப் புண்ணியவான்களோ சுகோட்டில் தாராளமாய்ப் பயமின்றி படுத்துக் குறட்டை விட்டுத் தூங்குகின்றார்கள். அவர்களைக் கண்ட மற்றவர்களுக்கு விசனம் மறந்து நகைப்பு வருகின்றது. அவ்விடந்தான் அந்திய காலத்தில் படுக்கவேண்டிய நிரந்தரமான இடம் என்று படுக்கிறார்களோ, அன்றி கைலாயநாதன் இருந்த இடமென்ற பக்தியினால் படுக்கின்றார்களோ தெரியவில்லை!

எனது அன்பு மிக்க சகோதர சகோதரிகளே!

இன்றைய தினத்தை நாம் நமது வாழ்நாளில் ஓர் முக்கிய நாளாகக் கொண்டாட வேண்டும்; ஏனெனில் சென்ற சில மாதங்களுக்கு முன்பு இதே லார்டு இர்வின் ப்ரபு அவர்கள் மகாத்மாவுடன் சமாதானத்திற்கு வருவதை மறுத்துத் தம்மால் கூடிய வரையில் சட்டங்களை எல்லாம் திட்டம் செய்தும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களைக் கைதியாக்கி மகாத்மாவையும் கைதியாக்கினர். அதே இர்வின் ப்ரபுவின் மனத்தில் கடவுளுடைய அனுக்ரகத்தினால் மாறுதல் ஏற்பட்டு தான் சிறைப்பிடித்த காந்தியை ராஜிக் கழைத்து ஒருவிதமான ஒப்பந்தத்தை முடித்தார். இதிலிருந்து நாம் அறிய வேண்டுவது யாதெனில், மகாத்மா காந்தியின் மகிமையும், அவருடைய சத்ய பரிபாலனமும் நன்கு விளங்கியதோடு, நமது இந்தியாவின் அடிமை இவ்விதமே இராது நீங்கி சுதந்திரம் பெறுவோம் என்ற உறுதி மனத்தில் தோன்றுகின்றது. நம்முடைய தலைவரால் இப்போது சமாதானம் நமக்கு ஏற்பட்டிருப்பினும் நாம் இதையே நம்பி சோம்பேறிகளாக உட்கார்ந்து விடலாகாது. எந்த நேரம் எந்த விதமான நிகழ்ச்சிகள் நிகழுமோ! அவைகளுக்கு நாம் இப்போதே தயாராக விருக்க வேண்டும், நாம் இன்று முதல் செய்ய வேண்டிய வேலை யாதெனில் நமக்கு நம் தலைவர் வாங்கியளித்துள்ள உரிமைப்படிக்கு அன்னியத் துணிக் கடை மறியலையும், கள்ளுக்கடை மறியலையும் நாம் கட்டாயம் செய்யவேண்டும். இவ்வருடம் நமக்குக் கிடைத்துள்ள உரிமையின் பயனாக நமது நாட்டினின்றும் வருடந்தோறும் செல்லும் 70 கோடி பணத்தில் பாதியேனும் தடை செய்து நம் நாட்டிலேயே நிறுத்தி நமது ஏழை மக்களுக்கு உதவும்படியாக நாம் செய்யவேண்டும். (காகோஷம்) நமக்கு அளித்துள்ள மறியல் செய்யும் உரிமைப்படி ஆங்காங்குள்ள நாட்டுப்புறங்களின் ஜனங்களுக்கு விஷயத்தை விளக்

ஊருக்குப் புறப்படுகையில் வேண்டிய எல்லா சாமான்களை எடுத்துக் கொண்டு தடபுடலாகப் புறப்பட்டும் இரயிலேறிய பிறகு முக்கியமானவற்றை மறந்துவிட்ட நினைவு வருகிறது. எந்த வேலையிலும் இவ்வித மறதி மனிதனை விட்டு விலகுவதே இல்லை.

கிப் பிரசாரம் செய்வது, கதர் அபிவிருத்தி செய்வது, சர்கா சங்கம் நிறுவச் செய்வது, காங்கிரஸுக்கு அங்கத்தினர்களைச் சேர்ப்பது, முதலிய பல வேலைகளை நாம் ஒரு நிமிடமும் தாமதமன்னியில் செய்ய வேண்டும். (கரகோஷம்) என் சகோதிரர்களே! சகோதரிகளே! இந்த கரகோஷ ஆரவாரம் செய்து என்னை உற்சாகப் படுத்தி விடுவது ஓர் பெரியது அல்ல. இதை நீங்கள் செய்கையில் நடத்திக் காட்ட முன் வந்து என்னை உற்சாக மூட்டுதலே உண்மையான உற்சாகமாகும். நீங்கள் இந்த விதேசித் துணியில் மறை பட்டிருப்பதை இன்றோடு இக் கடற் கரையில் சத்யம் செய்து விலக்கி விட்டு நாளையே தூய் மையான கதரைத் தரியுங்கள். மறியல் செய்வதற்குத் தொண்டராக வாருங்கள். இந்த கூட்டத்தில் சுமார் ஐயாயிரத்திற்கு மேல் கூடியிருக்கிறீர்கள். உங்களில் தேசத்திற்கு உதவி புரிய வருவதற்கு யார் யார் முன்னால் வருகிறீர்கள் என்பதை எனக்கு இப்போது விளக்கிக் காட்டும் பொருட்டு உண்மையாக, பிரமாண பூர்வகமாக உழைக்கும் எண்ணமுள்ள சகோதர சகோதரிகள் எழுந்து நின்று தயவு செய்து தங்கள் நாமதேயங்களைத் தெரிவியுங்கள். என்றாள். (கரகோஷம்)

சுமார் நூற்றுக் கணக்கில் ஆண்மக்களும், பெண்மக்களும் எழுந்து நின்று தங்கள் நாமத்தைக் கூறிச் "சத்யமாக நாங்கள் தேசத் தொண்டாற்ற வருகிறோம்" என்று ஆரவாரம் செய்துப் பின் உட்கார்ந்தார்கள். மீண்டும் ஸாவித்ரி பேச வாரம்பித்து, "ஆகா! இங்கு ஆயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தும் அதில் பாதி பேர் கூட எழுந்து வாக்குக் கொடுக்கவில்லை. இங்கு உட்கார்ந்திருக்கும் நீங்கள் இத்தாய் நாட்டில் பிறக்க வில்லையா! இத்தேசம் உங்களுடைய தல்லவா! நீங்கள் அன்னிய நாட்டிலா பிறந்தீர்கள். உங்களுடைய வாழ்க்கை அன்னியர்க்கு அடிமையாயிற்றே யன்றி நீங்கள் இத் தாய்நாட்டில் பாரதமாதா ஈன்றெடுத்த முப்பத்தியாறு கோடி

வயது சென்ற தம்பதிகளாயினும் காப்பி, ரொட்டி முதலிய பலகாரங்களை உல்லாசமாயும், விளையாட்டுச் சண்டையுடனும் புசிப்பதைக் காண ஆநந்தமாயிருக்கிறது, இளந் தம்பதிகள் அங்ஙன மிருப்பின் எத்தனை ஆநந்தமாயிருக்கும்?

மக்களில் சேர்ந்த சகோதர சகோதரிகள் அல்லவா! தன் நாட்டிற்கு உழைக்கத் இயங்குவாரு முண்டோ! நம் நாட்டின் பெருமை நமக்கின்றி வெளி நாட்டாருக்கு உண்டாகுமா! என் அன்பர்களே! காந்தி வள்ளல் படும் கஷ்டம் அவர் பிழைப்பதற்கா! அல்லவே. ஆயிரக்கணக்கான ஏழைகள் பிழைப்பதற்கும் நாமெல்லாம் சுகமே வாழ்வதற்கு மன்றோ அவர் பாடுபடுகின்றார். நீங்கள் மறியல் செய்ய முன் வராவிடினும் கதரைத் தவிர வேறு உடை கட்டுவதில்லை என்ற சத்தியமேனும் செய்யுங்கள். அதற்கும் பின்னடையாது வந்தே மாதரம் போடுங்கள். (கர கோஷத்திடையே வந்தே மாதரம் எல்லா ஜனங்களும் கோஷித்தார்கள்) இப்போதே என் மனம் குளிர்ந்தது. இங்குள்ளவர்களில் எத்தனையோ தனவந்தர்களிருக்கலாம். அவர்களில் மறியல் தொண்டர்களுக்கு உதவி செய்தற்கான பொருள் உதவி புரிய வேண்டும். எந்தப் பொருளாகக் கொடுப்பினும் சம்மதமே!" என்றதும் அனேக நோட்டுக்களும், பொத்தான்களும், சங்கிலி, கடியாரம், மோதிரம், வளையல், மெட்டு, பின், ப்ரூச்சு முதலியன ஏராளமாகச் சேர்ந்தன. ஸாவித்திரி அவைகளைக் கணக்கிட்டுப் பெற்றுக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்கி, "ஐயா! நாளை முதல் வீதி தோறும் பஜனை செய்ய வேண்டும். வீடு வீடாகச் சென்று விஷயத்தைக் கூறவேண்டும். சிறைச் சாலையிலிருந்து விடுதலையாகப் போகும் தேச பக்தர்களை நாம் எல்லோரும் சென்று வரவேற்க வேண்டும். அவர்களுக்கு மாலை முதலிய மரியாதை செய்து வரவேற்று அவர்களுக்காக ஓர் தனி விருந்து செய்ய வேண்டும். அதற்காக நீங்கள் எல்லோரும் வந்திருந்து உதவி புரிந்து நடத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்" என்று இன்னும் அனேக விஷயங்களைப் பேசிய பின் மங்களம் பாடி கூட்டத்தைக் கலைத்தார்கள். "ஸாவித்திரியம்மாளுக்கு ஜே" என்ற கர கோஷத்துடன் கூட்டம் கலைந்தது.

உண்மையான அன்பு வைத்துள்ள சிநேகிதர்களின் பேச்சும், உறவினர்களின் பேச்சும் அவர்கள் வாயிலிருந்து வரும் சப்தத்தினாலும், பதப் பிரயோகத்தினாலும், முகக் குறிப்பினாலும், கண் பார்வையினாலும் நன்றாகத் தெரிந்து விடுகின்றது. போலி அன்பர்களின் நேசமோ! அடாடாடா!.........

16—வது அதிகாரம்

பேரானந்தம்—பெருமை மறியல்

சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் எள் விழ இடமில்லாத கூட்டம் தேசியக் கொடிகளைத் தாங்கிக் கொண்டு "வந்தே மாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! சிறையினின்று விடுதலைபடையும் சகோதா சகோதரிகட்கு ஜே!" என்று பெரும் ஆரவாரம் செய்து கொண்டு தேச பக்தர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெருங் கூட்டத்திரளைக் கண்ட எல்லோருக்கும் ஆநந்தம் பொங்குகின்றது. அவ்விடம் "தேவ லோகமோ, அன்றி சொர்க்கமோ!" என்று ஐயுறும்படியாக விருக்கிறது. குறித்த நேரத்தில் ரயில் வந்து நின்றவுடன் முன்னிலும் பதின் மடங்கு கோஷம் அதிகரித்தது. சிறை சென்ற சகோதரர்களும், சகோதரிகளும் வண்டியை விட்டுக் கை குவித்த வண்ணம் ஆநந்த ஸ்வரூபமாக இறங்கினார்கள். அவரவர்களின் மனிதர்கள் அவரவர்களைக் கட்டியணைப்பதும், வந்தனம் செய்வதும் கை குலுக்குவதுமாக வித விதமான முறைப்படிச் செய்து மாலைகளைப் போட்டு புஷ்பத்தை வாரி இரைத்தார்கள்.

நமது திலோத்தமாவும் ஜெயலக்ஷ்மியும் இறங்கியவுடன் ஸாவித்ரியும், ரங்கமணியும் அவர்களைக் கட்டியணைத்து மாலைகளைக் கணக்கின்றி சூடி" "என் கண்மணி சோதரிகாள்! நீங்கள் தேச பக்தியில் ஈடுபட்டு முக்ய ஸ்தானமாகிய சிறைக் கோட்டம் செல்லும் பாக்யம் பெற்றீர். நாங்கள் அதைப் பெறுது பாவிகளானோம். என்

தேசிய விஷயத்தில் ஈடுபட்டுள்ள சகோதர சகோதரிகளின் மனத்தில் அத் தேச பக்தியின் ஆநந்த வெள்ளத்தைத் தவிர வேறு எண்ணம் உதிப்பதே இல்லை. முக்கியமான சொந்த காரியத்திலும் மனம் நாடுவதில்லை. தேச பக்தியின் மகிமையே மகிமை.


R.V. Raman

சகோதரிகாள்! உங்கள் புகழே புகழ். உங்கள் மகிமையே மகிமை." என்று கூறித் தங்கள் அன்பு முற்றும் தெரிவித்தார்கள். பிறகு துரைராஜு தன் இன்பத்தைக் காட்டி ஜெயலக்ஷ்மியை ஒரு பார்வை பார்த்து கை குலுக்கி, "கண்ணே! இன்றே நான் பாக்யவான். இன்றே நான் பேரானந்தக் கடலில் மூழ்கினேன். திலோத்தமா! எல்லாம் உன் தயவு தான்" என்று தன் சந்தோஷத்தைத் தெரிவித்தான். இவ்விதமே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துப் பேரானந்த மடைந்தார்கள். சகல தொண்டர்களையும் வரவேற்று மாலை மரியாதை செய்தார்கள்.

அன்று அவர்களுக்கெல்லாம் ஓர் பெரும் விருந்து நடந்தது. பிறகு எல்லோரும் ஊர்வலமாக திலகர் கட்டத்திற்கு வந்து கடற்கரையில் பெருங் கூட்டம் நடை பெற்று அதில் எல்லோருக்கும் வந்தனம் கூறியதோடு இனிமேல் செய்யவேண்டிய வேலையைத் திட்டம் செய்தார்கள். அந்த தினத்தில் சென்னைமா நகரமே.... என் இந்தியா முற்றிலுமே—ஓர் பேரானந்த உணர்ச்சி தாண்டவமாடியது என்று தாராளமாகக் கூறலாம்.

ஸாவித்திரியைச் சுட்ட கள்ளுக்கடைக்காரனுக்கு சட்டப்படி தண்டனை விதிக்கப்பட்டது. ஸாவித்திரியின் புருஷனும் ரங்கமணியின் புருஷனும் திருந்தியதைக் கேட்டு ஜெயலக்ஷ்மியும் திலோத்தமாவும் மெத்த சந்தோஷமடைந்தார்கள். தாங்கள் ஜெயிலிலிருந்த குதூகலமான விஷயங்களைப் பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டார்கள்.

* * * * * *

"அண்ணா! உன்னிடம் நான் சொல்வதற்கும் மனங் கூசுகின்றது; எனினும் கூறுகிறேன். ஸாரநாயகியை நீ மணம் செய்து கொள்ள நான் விரும்புகிறேன். உன்னபிப்பிராயத்தைக் கூறு" என்று வணக்கமாய் ரங்கமணி கேட்டாள்.

அதற்குள் ஸாரநாயகி "அம்மா! என்னுடைய விவாக விஷயத்தைக் குறித்து நீ கவலைப் படவேண்டாம். நான் விவாகத்தை

விரும்பவில்லை. உங்களையும், சித்தி, திலோத்தமா முதலியவர்களையும் பார்த்த பிறகு எனக்கு உலகில் யாருமே விவாகம் செய்துகொள்ள வேண்டாம் என்று தோன்றிவிட்டது. நான் என் காலத்தை முற்றும் தேச ஊழியத்திலேயே கழிப்பதாகத் தீர்மானித்துவிட்டேன். வீணாக மாமாவை உபத்திரவிக்காதே! அவரொரு சன்யாசி. நானொரு கன்னிகை. எனக்கு விவாகமே வேண்டாம். நான் இன்னும் சில மாதங்களில் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று மகாத்மாவின் பாதத்தில் விழுந்துவிடப் போகிறேன். அவர் எவ்வழி செய்கிறாரோ அதற்கு நான் உட்பட்டு நடக்கத் தீர்மானித்துவிட்டேன். ஆகையினால் இது விஷயத்தைப் பற்றி இனிமேல் பேச்சே எடுக்க வேண்டாம். நான் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள். ரங்கமணி தான் தன் புருஷனால் பட்ட துன்பத்தை எண்ணி அவள் மகளின் இஷ்டப்படியே விட்டு விட்டாள். மதனகோபாலனும் ஓர் பெரும் பாரம் கழிந்ததெனமெத்த மகிழ்ச்சி யடைந்தான். லாவண்யவதி அன்று முதல் மும்முரமாக தேசத் தொண்டாற்றக் கிளம்பிவிட்டாள். தேசமெங்கும் பரபரப்பும் உணர்ச்சியும் பரவிவிட்டது. எந்த ஊரிலும் தேச ஊழியமே மும்முரமாக நடைபெறுகின்றது.

*　　　*　　　*　　　*

சென்னையில் சைனா பஜார் ரோட்டிலும், நட்டான் பஜார், தேவராஜ முதலித் தெரு, கிடங்குத் தெருவு முதலிய தெருக்களிலும் உள்ள விதேச ஜவுளிக் கடைகளின் வாசலில இரு புறததிலும் ஸ்திரீரத்தினங்கள் ஆரஞ்சு வர்ணப் புடவையை உடுத்திக்கொண்டு, கையில் தக்ளியில் நூல நூற்றவாறு வெகு சாந்தமான பார்வையுடன், நகை முகத்தோடு நின்று மறியல் செய்யுங் காட்சியானது சென்னை மாகாணத்திற்கே என்றும் அழியாத ஓர் பேரானந்தத்தையும் புகழையும் அளிப்பதாயிற்று. நாட்டின நிலைமை யறியாது தடபுடலாக பணத் திமிர் கொண்டு அன்னிய நாட்டுத் துணியை வாங்க ;வருபவர்களுக்கு மறியல் தொண்டர்கள் வெகு சாந்தமாக இரு கரங்களையும் கூப்பி "ஐயா! அம்மா! அன்னிய நாட்டுத்துணி வாங்காதீர்கள். வருஷந்தோறும் நம் நாட்டை விட்டு 70 கோடி ரூபாய் கொள்ளை செல்லவிட்டு விடுவதனாலேயே நாம் இக் கதியை, ஏழ்மை நிலையை அடைந்தோம். நமக்கு வறுமையை நாமே தேடுவது தர்மமா! வேண்டாம்; கதர் கட்டுங்கள், அன்னியத் துணியை வாங்காதீர்கள். நமஸ்காரம்" என்று கூறுகிறார்கள். சுமார் 150 ஸ்திரீகளுக்கு மேல் மறியல் செய்யும் காட்சியானது எத்தகைய கன்னெஞ்சையும் கரைத்து ஆனந்தமும், சுதேச உணர்ச்சியும் கொடுக்கக் கூடியவிதமாய் விட்டது. அனேகர் வெளியூர் பிரசார

திற்கும் சென்று வருகிறார்கள். இத்தகைய அருமையான தொண்டாற்றுதற்குத் தினே தினே தொண்டர்கள் சேர்ந்துகொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்கு விரோதிகளாக இருந்தவர்களும் தொண்டர்களாகச் சேர்ந்து புனித ஸ்வரூபம் பெற்றுவிட்டார்கள். இவ்விதமே நம் பாரத நாட்டுச் சோதர சோதரிகள் பூர்ண பக்தியுடன் முன் வந்து தேச சேவை செய்தால் நம் நாடு சுதந்திரம் அடைவதில் தடை யுண்டா!....பாரதமாதா! நீ உன் மக்களுக்கு மதியளித்து உணர்ச்சி யுண்டாக்கவேண்டும். நம்முடைய கதா நாயகர்கள் முற்றும் தேச உணர்ச்சியில் கட்டுப்பட்டு தேசிய விஷயமாகச் சங்கங்கள் நிறுவச் செய்வதும், அது சம்மந்தமான வேலை செய்வதும், மறியல் செய்து மன மகிழ்வதுமே பேரானந்த சுகபோகமாக எண்ணி நாளுந் தவறாது தொண்டர்களுடன் கூடி விதேசி ஜவுளிக் கடை மறியலையும், கள்ளுக் கடை மறியலையும் செய்து அந்த ஆனந்த சுக போக வாழ்க்கையிலேயே மெய்ம் மறந்து இருந்து வருகிறார்கள்.

சகோதர சகோதரிகளே! இனியும் தூக்கமா? தூங்காதீர்கள்; விழித்துக்கொண்டு அன்னிய ஆடையின் மோகத்தை அறவே ஒழியுங்கள். தாய் நாட்டிற்கு உங்கள் ஆதரவை அளியுங்கள். நாம் இந்தியாவில்தான் பிறந்தோம் என்றதை எண்ணிப் பாருங்கள். அப்போதுதான் நம் நாட்டின் சிறப்பு விளங்கும். வருகிற தீபாவளிப் பண்டிகைக்கு எல்லோரும் தூய்மையான—புனிதமான—கதரையே தரித்துக் களிப்புடன் பண்டிகையைக் கொண்டாடுங்கள். இந்த உதவியாவது செய்யத் தவறாதீர்கள். கதர் கட்டுவதற்கும் பின்னடைந்தால் அதைவிட நமக்கு அவமானம் வேறு எதுவு மில்லை. கதரைக் கட்டிக் காந்தி படிகளின் வழியில் சேருங்கள்; வந்தே மாதரம்! அல்லாஹோ அக்பர்! மகாத்மா காந்திக்கு ஜே!

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" —திருக்குறள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

"ஸாரமதி" முற்றிற்று.

ஓம் தத் ஸத்

மன்னிப்பீர்களா!

மோகினிச் செல்வியின் அன்பர்களே!

உங்கள் அருமைக் குழவியாகிய மோகினிக்கு வருகிற டிஸம்பர் மாதத்தில் ஒன்பதாவதாண்டு ஆரம்பமாகிற தென்பதை நீங்கள் அறிவீர்கள். அனேக தேச பக்தர்களின் வேண்டுகோளினைப் பூர்த்தி செய்ய வேண்டி ஸாரமதி என்கிற நாவலை தேசிய உணர்ச்சி மேலிட்டுத் தற்கால நிலைமைகளை ஒட்டி வரைந்து பூர்த்தி செய்து என்னைக் கேட்டுக்கொண்டவர்களின் மனத்தையும் ஒருவாறு திருப்தி செய்து விட்டேன். இன்னும் அனேக அன்பர்கள் சிருங்காரம், சோகம், இரண்டும் கலந்து தேசிய உணர்ச்சி ததும்பக்கூடிய ஓர் சிறிய நாவல் வரைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள், அவர்களின் விருப்பப்படிக்கு அக்டோபர், நவம்பர் ஆகிய இரு மாதங்களில் 100 பக்கங்களுக்குக் குறையாமல் "நளின சேகரன்" அல்லது "செறுக்காலழிந்த சீமாட்டி" என்கிற பெயருடைய நாவலைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்துள்ளோம். அது இரண்டு மாதங்களில கட்டாயம் முடிந்துவிடும். டிஸம்பர் மாதத்தில் வேறு புதிய கதையை ஆரம்பம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்விரண்டு மாதத்திய சிறிய கதையை தனித்தனியே பிரித்து அனுப்புவதால் படிப்பதற்கு மிகவும் குறைவாக விருப்பதோடு கதையின் ரஸ பாவங்கள் அத்யாய இறுதியில் குறித்து நமது பழய நாவல்களைப் போல அனுப்புதற்குச் சரிப்படாதென்று தோன்றுவதால், இரு மாதச் சஞ்சிகைகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கதையைப் பூர்த்தி செய்து முழு புத்தகமாகவே நீங்கள் படித்தானந்திக்கும படியாகச் செய்ய வேண்டு மென்கிற எண்ணத்தினால் இரு சஞ்சிகைகளையும் 11—12 ஆக ஒன்றாக உங்கள் கரமலர் தாவி வரச் செய்துள்ளோம். அவ்வாறு வருவதற்கு இந்த அக்டோபர் மாதமே சாத்யமாயின் அனுப்பிவிடுகிறோம்; அவ்விதம் சாத்யப்படாவிடின் நவம்பர் மாதம் 15 தேதிக்குள்ளாகக் கட்டாயம் உங்களைத் தேடி வந்துவிடும். இதற்கு அனாவசியமாகக் கடித மெழுத வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரத்தைக் கவனத்தில் கொண்டு தாமதத்திற்கு மன்னிப்பீர்களா வென்று மோகினிச் செல்வி எதிர் பார்க்கிறாள்.

நிற்க, நமது சந்தா நேயர்கள் தங்கள் கருணை மாரியை இளம் பயிராகிய மோகினியின் மீது சந்தாத் தொகையாகப் பொழியச் செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்வது மிகையாகும். உங்களருமைக் குழந்தையின் போஷணை முற்றும் உங்கள் பொறுப்பில் இருக்கிறபடியால் நான் கேட்கவேண்டியதில்லை, அடுத்த சஞ்சிகை வெளிவருவதற்குள் எல்லாச் சந்தா நேயர்களும் தங்கள் தொகையைச் செலுத்தி உதவி புரிகுவார்களென்று சின்னஞ் சிறு குழவியாகிய மோகினி எதிர் பார்க்கிறாள். டிஸம்பர் மீ 20 தேதிக்குள் பண

மனுப்புகின்றவர்களின் பேர்களை வழக்கம் போல சீட்டுப் போட்டுப் பரிசுகள் அளிக்கப்படும், "உங்கள் ஆதரவளிக்க மறந்துவிடுவீர்களா! நான் தாமதமாக வருவதற்கு மன்னிப்பீர்களா?" என்கிறுன் உங்கள் அன்பை எதிர்பார்க்கும் சிறுமியாகிய மோகினி.

இங்ஙனம், தங்கள் சகோதரி
வை. மு. கோதை நாயகி.

ஒன்பதாவது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

புது வருஷ சந்தாவை டிசம்பர் மீ 20 தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்:—

முதல் பரிசு	ரூ. 25.	3-வது பரிசு	ரூ. 10
2-வது பரிசு	ரூ. 15	3 பரிசுகள்	ரூ. 5

நமக்கு ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவோம். அவர்களும், ஏஜண்டுகளும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பரிசுகளின் விவரம்.

9-வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

C. 43. Mr. Chinnasami Reddiar, Siruvanthadu.
R. 184. Mr. K. C. Raju, Durban.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

மானேஜர்

இனாம் மூன்று நாவல்கள் இனாம்

நமது சந்தா நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நமது சொந்த நாவல்களை மூன்று கட்டுகளாகப் பிரித்து ஐந்து ரூபாய் முன் பண மனுப்புகிறவர்கட்கு அவர்கள் கேட்கும் ஒரு கட்டு தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். ரூ. 15. மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு கீழ்க் கண்ட மூன்று கட்டுகளி லுள்ள புத்தகங்களுடன் "சுகந்தபுஷ்பம்" 'கோபாலரத்னம்" "மாதவமணி" என்ற 3 நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

1.	2.	3.
வைதேகி	பத்மசுந்தரன்	நவநீத கிருஷ்ணன்
சாருலோசனை	ராதாமணி	ருக்மிணீ காந்தன்
சண்பகவிஜயம்	கௌரீ முகுந்தன்	சாமளநாதன்
		வீர வஸந்தா

இனாம் ஒரு வருஷ சஞ்சிகையும் இனாம்

பல பரிசுகளும்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தது முதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்க்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப் பார்களென்று நம்புகிறோம்.

		பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு	மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை "	வீரவஸந்தா
(3)	3 " "	கோபாலரத்னம்
(4)	4 " "	சுகந்தபுஷ்பம்
(5)	5 " "	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 " "	சண்பகவிஜயம்
(7)	7 " "	நவநீதகிருஷ்ணன்
(8)	8 " "	வைதேகி அல்லது பத்ம சுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை

216327

'ஜகன்மோகினி' ஆபீஸ்
26. தோடித் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை.

இந்தியாவிலேயே மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனியாகிய

நியூ இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்டில்

உங்கள் ஆயுள், கட்டடங்கள், சரக்குகள், மோட்டார்கார்களையும் இன்ஷியூர் செய்து ஓர் புதிய இந்தியாவை ஸ்தாபியுங்கள்.

இதன் வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	3,56,05,275.
இதன் மொத்த நிதிகள்	ரூ.	1,44,19,590.
நாளது தேதிவரையில் செலுத்தப்பட்டுள்ள உரிமைத்தொகைகள் சுமார்	ரூ.	5,50,00,000.
1930-31-ஆம் வருஷத்திய இதன் பிரிமிய வருமானம் சுமார்	ரூ.	81,00,000.

ஓர் பத்திரிகையின் அபிப்பிராயம்.

"உண்மையில் இந்தியாவிலேயே மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி "நியூ இந்தியா" தான். மூலதனத்தைக் கவனிக்குமிடத்து உலகிலுள்ள பல மிகப் பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் இது ஒன்றெனக் கூறலாம்."

"இந்தியன் இன்ஷியூரன்ஸ்,"—ஜூன் 1929

இதன் விசேஷ அம்சங்கள்:—(1) சாசுவதமாக பணம் செலுத்த சக்தியற்றவர்களுக்கு அனுகூலங்கள். (2) விபத்துக்கள் காரணமாக ஏற்படும் மரணங்களுக்கு இருவித அனுகூலங்கள். (3) தானாகவே ஏற்படும் பறிமுதலில்லா உரிமை. (4) விஸ்தரிக்கப்பட்ட அவ்ஷ்யூரன்ஸ்- (5) பிரதி மாதம், மூன்று மாதங்களுக்கொருமுறை, 6 மாதங்களுக்கொருமுறை செலுத்தப்படும் தொகைகளுக்குப் பிரத்தியேக கட்டணமின்மை. மிகக் குறைந்த பிரிமிய விகிதம். (6) புருஷன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்தோ அல்லது இரு கூட்டாளிகள் சேர்ந்து ஜாயிண்ட் லைப் எண்டௌமெண்ட் பாலிஸிகள் எடுத்துக் கொள்ளலாம்.

விவரம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதுக:—

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

					“ஜகன் மோகினி” சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
சாருலோசனு (2-பாகங்கள்)	2	8	0	....	2	0	0
நவநீத கிருஷ்ணன்	2	0	0	....	1	12	0
ருக்மிணீ காந்தன்	2	0	0	....	1	12	0
சாமளநாதன்	2	0	0	...	1	12	0
சண்பக விஜயம்	1	12	0	....	1	8	0
கௌரீ முகுந்தன்	1	12	0	....	1	8	0
ஹாரமதி	1	12	0	....	....		
சுகந்தபுஷ்பம்	1	0	0	....	....		
கோபால ரத்னம்	0	14	0	...	....		
வீரவஸந்தா	0	8	0	....	....		
மாதவமணி	0	3	0	....	....		

ஒன்பதாவது ஆண்டு!

“ஜகன்மோகினி”

இம் மாதாந்த சஞ்சிகை ஸ்ரீமதி வை. மு கோதைநாயகி அம்மாள் எழுதிய அற்புதமான நாவல்களையும், அநுபவ நீதி சாரங்களையும் தன்னகத்தே தாங்கிக்கொண்டுள்ளது. இதன் ஒன்பதாவது ஆண்டில் 1931 ௵ டிசம்பர் ௴ முதல் ஆரம்பம். இதில் வெளியாகும் நாவல் ஒரு வருடத்தில் டிம்மி சைஸில் ($8\frac{1}{2}$'' × $5\frac{1}{2}$'') சுமார் 600 பக்கங்கள் ஆகின்றது. அந்த வருடம் முடிந்ததும் தனி நாவல் (தபாற் செலவு தவிர) ரூ. 3-க்கு விற்கப்படும்; ஆகையால் “ஜகன் மோகினி”க்குச் சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த சந்தாவில் நிறைந்த பக்கங்களையுடைய நாவல்களை அடைவதுடன், மேற்படி நூலாசிரியர் எழுதிய இதர நாவல்களையும் இப்பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்பதைக் கவனிக்கவும்.

மாதிரிப் பிரதி இனும்!

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது!

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.